மலர்-5 இதழ்-119 ஆகஸ்ட் 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்



ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை

## தலைமுறை தலைமுறையாக தொடரும் 42 பாவங்கள்

www.aanmeegamalar.com
e-magazine

# இறந்தபின்பும் சீனாவிடமிருந்து இந்தியாவை பாதுகாத்த பாபா

# நல்லவற்றை கேட்டு பிள்ளைகள் வளரவேண்டும்




இரணியன் மனைவி லீலாவதியை கர்ப்பவதி என்றும் பாராமல் கவர்ந்து சென்று கொண்டிருந்தான் இந்திரன். இடைமறித்த நாரதர் இந்திரனுக்கு அறிவுரை கூறி கர்ப்பவதியாக இருந்த லீவாவதியை தன் பொறுப்பில் ஏற்றுத் தனது ஆசிரமத்தில் தங்கச் செய்தார்.

லீலாவதி அரண்மனையிலேயே இருந்திருந்தால் அரக்க குணத்துடன் தகப்பனின் அசுர குணத்துடன் திருமாலை வெறுக்கும் முகமாக கரு வளர்ந்திருக்கும்.

ஆனால் லீலாவதி தற்போது நாரதரின் ஆசிரமத்தில் இடைவிடாது கேட்கும் திருமாலின் மந்திரமான நாரா யணாய நாராயணாய என நொடிக்கு இருமுறை திருமாலின் பெருமைகளை கேட்டே கரு வளர்ந்தது.

அசுர குணம் துளி கூட கரு வளர்ச்சியில் ஒட்டவே இல்லை. அதனால் தான் அக்கரு பிறந்து பிரகலாதன் என்ற பெயர் பெற்று இடைவிடாது நாராயணாய நாராயணாய என உச்சரித்துக் கொண்டு இருந்தான். அவனே நரசிம்மர் அவதாரத்திற்கு வழி செய்தான். ராமரும் கிருஷ்ணரும் கருவில் ஜனித்தவர்கள் என்றாலும், நரசிம்மரோ தன் பக்தன் பிரகலாதன் வாக்கைக் காக்க தூணிலிருந்து திடீரென்று யாரும் எதிர்பார்க்காத வகையில் அவதரித்தார். இதனால் தான் பலரும் ராம கிருஷ்ண அவதாரங்களை விட நரசிம்மரைத் தொழுதால் உடனடிப் பலன் கிட்டும் என்று நம்புகிறார்கள். நம்பினோர் கெடுவ தில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு.

# விரும்பியதை ஈடேற்ற உதவும் எலுமிச்சைபழ தீபம்

மனிதர்களாக பிறந்தாலே துன்பம், துக்கம் போன்றவற்றை அவசியம் அனுபவித்தே தீரவேண்டும், இவைகள்தான் ஒரு மனிதனை பக்குவப்படுத்தி, வாழ்க்கையின் சாராம்சத்தை புரியவைப்பவை.

ஆனாலும் தெய்வ நம்பிக்கையும், தெய்வ வழிபாடும் மேற்கொள்ளும்போது இந்த துன்பங்களின் வீரியம் குறைய வாய்ப்புள்ளது, வீரியம் குறைவதோடுமட்டுமல்லாமல், அந்த துன்பங்களை துடைத்தெரியும் மனோ தைரியம் கூடுவதற்கு தெய்வ வழிபாடு மிகவும் உதவுகிறது.

அந்த வகையில் எப்பேற்பட்ட கஷ்டங்களிலிருந்து விடுபடவும், எண்ணியது எண்ணியபடி நடக்கவும் கண்கண்ட தெய்வமாய் விளங்குவது துர்க்கை.




துர்கையை செவ்வாய், வெள்ளி, மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வரும் ராகு காலத் தில் வழிபடுவது மிகுந்த பலனை தரும்.

செவ்வாய், வெள்ளிகளில் எலுமிச்சைப் பழத்தில் தீபமேற்றி, எதாவது ஒரு கிழமையில் ஒன்பது வாரமும் தொடர்ந்து செய்வதால் ஒன்பதாவது கிழமைக்குள்ளேயே நாம் விரும்பியது ஈடேறும்.

# மகாலட்சுமிக்குரிய வெள்ளைக் குதிரை





புனிதவேல்

சுக்கிரனின் வாகனமாகவும், சூரியனின் வாகனமாகவும் இருப்பது வெள்ளை குதிரை தான். ஏழு குதிரைகள் பூட்டிய வாகனத்தில் சூரிய பகவானும், வெள்ளை குதிரையில் சுக்கிர பகவானும் அருள் புரிகின்றார்கள். கஜமுக விநாயகருக்கு யானை விசேஷமானது போல வாழ்வில் செல்வம் செழிக்க வெள்ளை குதிரை மிகவும் விசேஷமானது. ஒருமுறை சுக்கிரனுடைய வாகனமாக இருக்கும் வெள்ளை குதிரையை மகாலட்சுமி தேவி தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்தாராம்

அச்சமயத்தில் ஸ்ரீமன் நாராயணன் பேசிய வார்த்தைகள் எதுவும் மகாலட்சுமி தேவியின் செவிகளுக்கு விழவில்லை. இதனால் ஆத்திரமடைந்த மகாவிஷ்ணு மகாலட்சுமியை குதிரையாக போகக் கடவாய் என சபித்து விட்டாராம். இதனால் அழகிய வெள்ளை குதிரையாக பூலோகத்தில் மகாலட்சுமி தேவி பிறந்ததாக புராணங்கள் குறிப்பிடுகிறது. எனவே குதிரையில் மகாலக்ஷ்மி தேவி வாசம் செய்கிறார். ஏழு குதிரைகள் பூட்டிய ரதங்களில் ஒய்யாரமாக வரும் சூரிய பகவான் நமக்கு சுபிட்சத்தை கொடுக்க கூடியவர்.

இல்லற வாழ்க்கையில் இனிமை காண சுக்கிரபகவான் உடைய அருள் வேண்டும். களத்திர காரனாக விளங்கும் சுக்கிரனுடைய அருளின்றி நல்ல மனைவியும், நல்ல கணவனும் ஒருவருக்கு அமைவது இல்லை. வீட்டில் கணவன் மனைவி ஒற்றுமை அதிகரிக்கவும், கன்னிப்பெண்களுக்கு மனதுக்குப் பிடித்த வரன் அமையவும், ஆண்க ளுக்கு நல்ல மனையாள் அமையவும் சுக்கிர பகவானை வழிபடுவது சிறப்பான பலன்களை கொடுக்கும்.

அதுபோல அவருடைய வாகன மாக விளங்கும் குதிரை படத்தை வீட்டில் மாட்டி வைப்பது இன்னும் சிறப்பு அம்சமாகும். ஏழு குதிரைகள் கொண்ட படங்கள் அதிர்ஷ்ட படங்களாக கூறப்படுகிறது. அது போல வெள்ளைக்குதிரை படத்தை மட்டுமே மாட்டி வைத்தாலும் அதிர்ஷ்டம் தான்.

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572



www.aanmeegamalar.com




# சிவனை காண வாலிக்கு வழி காட்டிய இராவணன்

வாலி மிகச் சிறந்த சிவ பக்தன், கிஷ்கிந்தைக்கு அரசான இருந்தாலும், சிவ பூஜையை கடமை தவறாமல் செய்து வந்தார். தினசரி 4 சமுத்திரத்தில் நீராடி விதிப்படி நித்யகருமம் முடித்து பின்பு கயிலை மலை சென்று முதலில் நந்தி தேவரை வழிபட்டு அவரிடம் அனுமதி பெற்று பார்வதி சமேதரான சந்திர சடாதர மூர்த்தியை மனம், வாக்கு, காயங்களினால் வழி பட்டுப் பின் தன் நகரினை அடைந்து நீதியுடன் நல்லாட்சி புரிந்து வந்தார்.

ஒருநாள் திக்விஜயம் செய்துவந்த இராவணன் வாலியைக் கண்டு குறும்பாக அவன் அக்குளில் தன் கையை விட்டுப் பிடிக்க முற்படுகையில் வாலி தன் வாலினால் இராவணன் உடல் முழுவதையும் சுற்றி கட்டி விடுகிறார். பின்னர் அப்படியே சமுத்திரங்களில் நீராடி கயிலை மலை சென்று நந்தி தேவனை வணங்கி, சிவனைக் காண அனுமதி கேட்டார்.

நந்தி தேவர் "நமது கைலாசபதியானவர் திரிபுர சம்காரத்தின் பொருட்டு முப்பத்து முக் கோடி தேவர்களோடும் அதிகாபுரியை அடுத்த ஆதிபுரத்திற்கு (நெசனூர்) சென்றுள்ளார் என்றார்." உடனே சிவபெருமானை தரிசிக்க வேண்டி நந்திதேவரிடம் வாலி ஆதிபுரத்திற்கு வழிகேட்க, நந்திதேவரோ, உன் வாலினால் கட்டுண்டு கிடக் கும் இராவணன் மிகச்சிறந்த சிவ பக்தன். சிவன் இருக்கும் இடம் எதுவாகினும் இராவணனிற்கு தெரியும் அந்த ஆதிபுரத்தை அவன் அறிவான் என்று கூறுகிறார்.

உடனே வாலி இராவணனைப் பார்த்து ஆதிபுரத்திற்கு வழி சொன்னால் இந்த கட்டை தளர்த்தி உன்னை விடுவிப்பேன் என்கிறார். உடனே இராவணன் இந்த ஆதிபுர திருத்தலத்தை காட்டிட அங்கு திரிபுரசம்கார மூர்த்தியாய் உள்ள சிவபெருமானைக் கண்டு பேரானந்தம் அடைந்தார் வாலி. இரவணனால் வாலிக்கு சுட்டிக்காட்டப்பட்ட திருத்தலம்தான் ஆதிபுரீஸ்வரர் சிவஸ்தலம்.

வாலியின் வாலினால் கட்டுண்டு இராவணன் விழிபிதுங்கி நிற்கும் காட்சி மூல விக்ரகம் உள்ள சுற்றுச்சுவரின் வெளிப்புறத்தில் தெற்கு திசையில் உள்ளது.




## கொரோனா தொல்லை நீங்க

# 10 நாட்கள் தொடர்ந்து அதிருத்ர மகா யாகம்

*தீய நோய் நீங்க (கொரோனா) தீ ஓம்புதல் செய்து அதிருத்ர மகா யாகம் ஆயிரம் சண்டிமகா யாகம் பத்து நாட்கள் நடைபெறுகிறது*

நமது தேசத்தில் தற்போது வந்து பரவியுள்ள கொரோனா எனும் தீய தொற்று நோயால் பொதுமக்கள் வாழ்வை சிதைத்து வருகின்றன இதைப் போல் முற்காலத்தில் நடந்து உள்ளது பஞ்சம் பினிகள் கொள்ளை நோய்கள் போன்றவற்றால் மக்கள் மனநலம் உடல் நலம் குன்றிய காலத்தில் மற்றும் அனைத்து பிரச்சனைகளுக்கும் அதிருத்ரம், சதசண்டி யாகம் கொற்றவை வழிபாடு அக்னி வழிபாடு செய்து நம் முன்னோர்களும் நம் நாட்டை ஆட்சி செய்த மன்னர்களும் மக்களை காத்து தெய்வ அருளால் வெற்றியும் பெற்றுள்ளனர்.

ஐந்து பூதங்களின் நடுவான தீ ஓம்புதல் சிறப்பாக சொல்லப்படுகிறது வேத மந்திரங்களில் ஸ்ரீ ருத்ரம் பினி போக்கும் சிறந்த வழிபோக்கும் வைத்திய தலைவன் என செல்லப்படுகிறது. திருமூலர் அக்னி காரியம் பற்றி பல பாடல்களில் குறிப்பிட்டு உள்ளார்.

இந்த மனித உடல் மண் அகல் போன்றது கர்ம வினைகள் எண்னெய் போன்றது வினையால் விளைந்த ஏற்ற நோய்கள் திரி போன்றது இவற்றை ஒன்று சேர்த்து வேத முறைப்படி நடைபெறும் யாகத்தால் நோய் எரிந்து விடும் தீயினால் தூசாகும் தொற்று நோய் அழிந்து எல்லா கஷ்டங்களுக்கும் ஒரே தீர்வு சிவ ஆராதனையுடன் சண்டியாகம் செய்வதுதான் இத்தகைய சிறப்பு மிக்க அதிருத்ர மகா யாகம்.

ஸ்ரீ சஹஸ்ர (ஆயிரம்) சண்டி யாகம் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே பஞ்சபூதேஷ்வரத்தில் உள்ள ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் வரும் ஆகஸ்ட் மாதம் 7ம் தேதி தொடங்கி 16ம் தேதி வரை நடைபெறுகிறது.




இந்த யாகத்தை வேத சான்றோர்களை வைத்து வேத முறைப்படி தஞ்சை குரு ஜீ கணபதி சுப்ரமணியம் தலைமையில் நடைபெறுகிறது. ஆகஸ்ட் 7ம் தேதி சகல சௌபாக்கியங்கள் வேண்டியவர்க்கு வேண்டிய வண்ணம் கிடைக்க ஸ்ரீ வாஞ்சா கல்பலதா கணபதி ஹோமத்துடன் தொடங்கி அதிருத்ர மகா யாகம் ப்ரத்யங்கர யாகம் ஸ்ரீ தஷ்ண காளி ஹோமம், ஸ்ரீ வன துர்கா யாகம், ஸ்ரீ வாராஹி யாகம், ஸமக்ரபஷ சண்டி யாகம், சுவாஸினி கன்னிகா வடுக பூஜைகளுடன் ஆகஸ்ட் 16ம் தேதி திங்கள் கிழமை வரை நடைபெறுகிறது.

இதற்க்கான ஏற்ப்பாடுகளை ஸ்ரீ மகா பஞ் சமுக ப்ரத்யங்கிரா ஸாக்த மடாலய நிர்வாகி ஞானசேகர சுவாமி ஜீ, மாதா ஜீ ராஜகுமாரி ஆகியோர் மேற்பார்வையில் பக்தர் கள் செய்துவருகின்றனர்.

இக்கோவிலில் பதினேட்டு சித்தர்கள் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மிகப் பெரிய யாக மண்டபத்தில் யாக சாலைகள் வேத முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

இது பற்றி ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கரா கோவிலில் உள்ள ஞானசேகர சுவாமி கூறியதாவது இங்கு அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும் என்பதற்க்காக கடந்த பதினெட்டு ஆண்டுகளாக சத சண்டி, அயுத்த சண்டி யாகங்கள் நடத்தப்பட்டு உள்ளது.

இந்தாண்டு பத்தொன்பது ஆண்டாக உலக மக்கள் எதிர் நோக்கும் பஞ்சம் கொரோனா போன்ற தீய தொற்று நோய்கள் மற்றும் புயல் பூகம்பம் இயற்கை பேரழிவுகளில் இருந்து காத்து எல்லா மக்களும் எல்லா ஜீவ ராசிகளும் பேரானந்தத்துடன் வாழ வேண்டி ஸ்ரீ காஞ்சி மகா ஸ்வாமிகள் அருளால் உலகில் முதல் முதலில் கொரோனாவில் இருந்து விடுபட நோய்த்தொற்று முற்றிலும் அழிய வேண்டியும் உலக நன்மைக்காக மத்திய மாநில அரசுகளின் கொரோனா விதி முறைகள் வழிகாட்டுதலை பின்பற்றி நடத்தப்படுகிறது.

இந்த யாகத்தில் எந்த கோவிலிலும் இல்லாத வகையில் இந்திய மருத்துவ பொருளான மிளகு, ஆஹுதி செய் யப்படுகிறது.



அழகுராஜா

இதில் பக்தர்கள் அனைவரும் முககவசம் அணிந்தும் சமுக இடை வெளிவிட்டு கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர் என தெரிவித்தார். மேலும் இந்த யாக விபரங்களை 9842858236 என்ற எண்ணில் பக்தர்கள் தொடர்பு கொள்ளலாம்..

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# பயத்தை போக்கி வெற்றியை தரும் ஸ்ரீ முன்குடுமீஸ்வரர்

புகழ் மணக்கும் தொண்டை மண்டலத்தின் பொன்விளைந்த பூமியாக, பொன் விளையும் பூமியாகத் திகழ்கிறது பி. வி. களத்தூர் என்னும் பொன்விளைந்தகளத்தூர். இங்கு சதுர்புஜராமர் மிகவும் பிரசித்தம். மூன்றாம் நந்திவர்மன் காலம் முதல் சோழர்கள் ஆட்சிக் காலம் வரை இந்த களத்தூர் ஒரு பெரும் கோட்டமாக திகழ்ந்துள்ளது. அப்போது இக்கோட்டத்தில் பல கூற்றங்களும், பல நகரங்களும், பல தனி ஊர்களும், ஏன்?மதுராந்தகம் நகரம் கூட அடங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அப்படிப்பட்ட களததூர், பொன்விளைந்த களத்தூராக போற்றப்படக் காரணம் என்ன? பார்ப்போமா?

களைந்தயென்றும், களத்தூர் என்றும் அழைக்கப்பட்ட இத்தலத்தில் சுமார் 700 வருடங்களுக்கு முன்பு சுவாமி நிகமாந்த மஹா தேசிகர் யாத்திரையின் போது ஒரு நாள் இரவு இங்கு தங்கினார். தன்னுடன் தான் நித்திய பூஜை செய்யும் சாளகிராமத்தையும், குதிரை முகம் கொண்ட ஹயக்ரீவ பெருமானையும் கொண்டு வந்திருந்தார்.

மகா தேசிகர் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்க, ஹயக்ரீவர் முழு குதிரையாக வடிவெடுத்து, ஊரை வலம் வந்து விளைந்திருந்த நெற்க்கதிர்களை மேய்ந்தார். குதிரை வாய்ப் பட்ட கதிர்கள் எல்லாம் பொன்னாக மாறியது. மறுநாள் அதிகாலை விவசாயிகள் நெல்லறுக்க கழனிச் சென்று பார்க்க....வயல்வெளிகளில் பொன் கதிர்கள் பரவி கிடப்பதைக் கண்டு அதி சயித்துப் போயினர். தேசிகரிடம் விவசாயிகள் வந்து நடந்தவற்றை கூறிட.....எல்லாம் அந்த நாராயணரின் செயல் எனக் கூறி மகிழ்ச்சி அடைந்தார்.

இச்சம்பவத்திற்கு பின்னர் இவ்வூர் பொன் விளைந்தகளத்தூர் ஆனது. நெற்கதிர்கள் குவிக்கப்பட்டு சேமிக்கும் இடம் [களம்] "பொற்க் களந்தை" என்றும், அருகிலுள்ள கொல்லையில் நெல் மணிகளை பதர் நீக்கி தூற்றியதால் "கொல்லைமேடு" என்றும், தூற்றப்பட்ட நெற்ப் பதர்களை அருகாமையில் {ஒரு கிலோ மீட்டர் தூரத்தில்} ஒன்றாகக் குவித்ததால் "பொன் பதர்கூடம்" என்றும், பண்டமாற்று முறையில் பொன்னை மாற்றி, பணம் பெற்று வாணிகம் செய்ததால் "பொன்மார்" என்ற ஊரும் இந்த தலத்தில் நடந்த நிகழ்வைத் தொட்டு ஏற்பட்ட ஊர்களாகும். இக்களந்தை என்னும் கலத் தூரை பல்லவ வழித்தோன்றலான கூற்றுவர் ஆட்சி செய்து வந்தார். மற்ப்போர், விற்ப்போர், வாட்ப்போர் என அனைத்திலும் வல்லவரான இவர் எதிரிகளுக்கு எமன் போன்று விளங்கியதால்


www.aanmeegamalar.com





"கூற்றுவர்" என அழைக்கப் பெற் றார். சிற்றரசராகத் திகழ்ந்த இம்மன்னர் தனது படை வலிமை யால் பற்பல மன்னர்களை விழித்து, வெற்றிக் கண்டார். சோழர்களையும் வென்று தன் ஆதிக்கத்தால் அடக்கினார்.

சிறந்த சிவபக்தரான இவர், தில்லைவாழ் அந்தணர்களிடம் சென்று, தனக்கு முடிசூட்டுமாறு கோரினார். தில்லை அந்தணர் களோ...." தாங்கள் சேர சோழ பாண்டிய மன்னர்கள் தவிர வேறு யாருக்கும் முடி சூட்ட மாட்டோம்" என மறுத்து விட்டனர். கூற்று வரோ அந்தணர்களை அடிபணிய செய்யாமல், தில்லை நடராஜப் பெருமானிடம் சென்று உன் திருவடியையே எமக்கு முடிசூட்ட வேண்டும் என்று வேண்டினார். இறைவன் அவர் கனவில் தோன்றி அவரது தலையில் தனது திருவடிகளை சூட்டினார். அதுமுதல் கூற்றுவர் பரமனின் திருவடியையே மணிமுடியாகக் கொண்டு ஆட்சி புரிந்தார். அதன்பின் கூற்றுவர், கூற்றுவ நாயனாராகப் போற்றலானார்.

தொன்றுதொட்டு சிவாலயங் களில் பூசனைப் புரிந்து வருவது சிவாச்சாரியார்கள். அவ்வாறான சிவாச்சாரியார் ஒருவர் இங்கு ஈசனை அனுதினமும் செவ்வனே பூஜை செய்து வந்தார். அப்படி பூஜை புரியும் பூஜைக்கான சாற்று மாலையை தினமும் அரசனிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்பது அரசக் கட்டளையாகும். ஒருநாள் ஈசனுக்கு சாற்றிய மாலையை (பக்தி பூரிப்பால்) தான் சூடிப்பார்க்க வேண்டும் என்ற ஆசை வெகு நாட்களாக இருந்தது அக்குருக்களின் மனைவிக்கு. அப்படியொரு தினம் ஈசனுக்குச் சாற்றிய மாலையை, குருக்களின் அனுமதியின்றி சூடி மகிழ்ந்தாள். அதை கண்ட குருக்கள் அதிர்ச்சி அடைந்தார். மனைவியை கோபித்துக் கொண்டு, அம்மாலையினை வாங்கி, அரசனிடம் சென்று சேர்ப்பித்தார் சிவாச்சாரியார்.

அன்றைய தினம் ஆவலுடன் அந்த பிரசாத மாலையை வாங்கிய அரசன், அம்மாலையில் ஓர் தலை முடி இருப்பதை கண்டு கோபங் கொண்டார். மாலையில் தலைமுடி எப்படி வந்ததென கோபக்கணை வீசினார். பயந்து நடுங்கிய குருக்கள், அது சிவனின் தலைமுடி என்று பொய் கூறி விடுகின்றார். இதைக் கேட்ட அரசன், 'சிவனின் தலை முடியா?? ஒருகாலும் இருக்காது. அப்படி சிவனுக்கு தலைமுடி இருந்தால் நாளையே நான் அதை பார்க்க வேண்டும். இல்லை என்றால் உமக்கு கடும் தண்டனை அளிப்பேன்" என கடுஞ்சினத்துடன் குருக்களிடம் கூறி அனுப்பினார்.




பயத்தில் நடுங்கிய குருக்கள், சிவனே கதியென ஈசனது பாதத்தில் விழுந்துக் கதறி னார். மயக்கமடைந்தார். குருக்கள் நித்தியப்படி நியமத்துடனும், பக்தி சிரத்தையுடனும் செய்த பூஜையில் மகிழ்ந்த ஈசன் அசரீரி வாயிலாக, "அர்ச்சகரே!! அச்சம் வேண்டாம். நாளை அரசனை அழைத்து வாரும். யாம் சடைமுடியுடன் காட்சி தருகிறேன். நிம்மதியாக வீடு செல்க" என்று வாக்களித்தார்.

கண்விழித்த குருக்கள் உள்ளம் பூரித்து, துணிவு கொண்டு எழுந்தார். நேராக அரசனிடம் சென்று, ஆலயத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். தனது படையுடன் ஆலயம் அந்த அரசனுக்கு ஈசன் சடாமுடி தாங்கிய தனது தலையில் முன் குடுமியுடன் அருட்காட்சி தந்து அரசனை அசர வைத்தார். அரனாரோடு ஆலய அர்ச்சகரையும் அடி பணிந்து போற்றினார் அரசர்.

இந்நிகழ்வுக்குப் பின்னர் இத்தல ஈசர் முன் குடிமீஸ்வரர் என்று போற்றலானார்.

வள்ளல் இராமலிங்கர் பதிப்பித்த தொண்டை மண்டல சதகம் மற்றும் புள்ளிருக்குவேளூர் கலம்பகம் முதலிய நூல்களை எழுதி, பெரும் புகழ் பெற்ற படிக்காசுப்புலவர் இங்கு வாழ்ந்த காலத்தில் தினசரி இறைவனிடம் பொற்காசு பெற்று தனது இறைப்பணியை நிறைவாக செய்து வந்ததும் இத்தலத்திற்குரிய கூடுதல் பெருமையாகும். நளவெண்பாவை எழுதி, "வெண்பாவுக்கு ஓர் புகழேந்தி" எனப்பெரும் பெயர் படைத்த புகழேந்திப்புலவர் பிறந்தது இவ்வூரில்தான். கண்பார்வை இல்லாமல் ஆயிரம் கோடி ஏடுகளை எழுதாமல், மனதில் எழுதிப்படித்த வித்தகரான அந்தகக்கவி என்று போற்றப்பட்ட வீரராகவ முதலியார் வாழ்ந்த ஊர் இது.


மோ.கணேஷ்

ஊரின் வடகிழக்கு திசையில் பரந்த இடப்பரப்பிற்கு நடுவே அமையப்பெற்றுள்ள இவ்வாலயம், மத்திய அரசினுடைய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. கிழக்கு பார்த்த ஆலயம். உயர்ந்த மதில் சுவர். தெற்கே வாயில் கதவு அமைந்துள்ளது. உள்ளமைப்பு பாதி மூடுதளமாகவும், பாதி திறந்த வெளியாகவும் உள்ளது. கிழக்கு பக்கமாகவும் வாயில் கதவு அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குப்புறம் பலிபீடம் மற்றும் நந்தி அமைந்துள்ளது. தெற்கு வாயிலுள் நுழைய 32 தூண்கள் கொண்ட மகா மண்டபம். நேராக அம்பாள் சந்நிதி. அம்பிகையாக ஸ்ரீ மீனாட்சி அம்பாள் நின்ற கோலத்தில் எழில் சிந்துகின்றன்றாள். அடுத்தபடியாக இறைவன் சன்னதியை அடைகிறோம். இறைவன் சந்நிதி மண்டபம், அந்த்ராளம், கருவறை அமைப்பில் அமையப்பெற்றுள்ளது.

விசாலமான கருவறை. அதன் நடுவே சதுர ஆவுடையார் கொண்டு முன் குடுமி யுடன் அபூர்வமாக காட்சி தருகின்றார் ஸ்ரீ முன் குடிமீஸ்வரர். அதியற்புத தரிசனம். பிராகாரத்தை வலம் வருகையில் முதலில் கணபதி தரிசனம் தருகின்றார். கோஷ் மாடங்களில் அழகிய சிலா வடிவங்களைக் கண்ணுறுகின்றோம். வடமேற்கில் சுப்ரமணியரை காண்கின்றோம். வடகிழக்கில் நவ கிரகங்கள் அமைந்துள்ளன.

இங்கு கூற்றுவ நாயனாருக்கும் சிலாரூபம் உள்ளது. ஏனைய சிவா லய தெய்வங்களையும் முறையே தரிசிக்கின்றோம். சுவாமி விமானம் தூங்கானை மாடம் எனப்படும் கஜபிருஷ்ட விமானமாகத் திகழ்கிறது.

விமானம் தவிர ஏனையவைகள் கல்கட்டிடமாக விளங்குகின்றன.









பெருமைகள் பல கொண்ட இவ்வாலயம் கி.பி.750–இல் நந்திவர்மப் பல்லவனால் எழுப்பப்பட்டதாகும். கூற்றுவ நாயனார் அரசாண்ட இத்தலம் சோழ, பல்லவ, விஜயநகர பேரரசுகளின் வரலாற்றுப் பதிவுகளைக் கல்வெட்டுகளாகக் கொண்டுள்ளது. இவ்வாலயத்தில் சுமார் 20 கல்வெட்டுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

முதலாம் குலோத்துங்கன் கி.பி.1075–இல் இறைவழிபாட்டிற்கு நிலமும், விளக்கெறிக்க பொன்னும் தானமாக தந்துள்ளான். கி.பி. 1093–இல் மூன்று சந்திகளிலும் விளக்கெறிக்க ஏற்பாடு செய்துள்ளான்.




கி.பி. 1133–இல் விக்ரம சோழன் ஆட்சியில் பிராமணர்களுக்கு நிலம் ஒதுக்கிய குறிப்பு காணப்படுகிறது. 1145–இல் இரண்டாம் குலோத்துங்கன் இக்கோவிலுக்கு நந்தவனம் அமைத்து தந்துள்ளான். அதோடு இவ்வூருக்கு "குலோத்துங்க சோழன் திருத்தொண்டை தோக நல்லூர்" எனவும் பெயரிட்டுள்ளான்.

மூன்றாம் குலோத்துங்கன், மாறவர்மன் சுந்தரபாண்டியன், மூன்றாம் இராஜராஜன் ஆகியோரும் இவ்வாலயத் திருப் பணிகளை அதிகம் செய்துள்ளனர். கி.பி. 1264 இல் சடையவர்மன் இவ்வாலயத்தை பராமரித்து, நிலம் ஒதுக்கியுள்ளான். அதோடு இவ்வுரை "கங்கைகொண்ட சதுர்வேதிமங்கலம்" எனவும் அழைத்துள்ளான். கி.பி. 1265–இல் விஜயகண்ட் கோபாலன், கி.பி.1507–இல் வீரநரசிம்ம பல்லவன் ஆகியோர் ஆட்சிக் காலத்திலும் நிலங்கள் பலவற்றைத் தானமாக அளித்துள்ளனர்.

இங்கு சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் நந்தவனம் அமைக்கப்பட்டு எழில் சிந்துகின்றது. 2004–ஆம் ஆண்டு இவ்வாலய குடமுழுக்கு நடந்துள்ளது. இத்தல தீர்த்தமாக ஆனந்த கூபம் (கிணறு) உள்ளது.

இவ்வாலயத்தில் மாதப் பிரதோஷங்கள், பௌர்ணமி மற்றும் சித்ரா பௌர்ணமியில் 108 பால்குட அபிஷேகம், ஆனித் திருமஞ்சனம், ஆடிப்பூரம் 108 சங்காபிஷேகம் மற்றும் கூற்றுவ நாயனார் குருபூஜை, நவராத்திரி, அன்னாபிஷேகம், கந்தர்சஷ்டி, கார்த்திகை சோமவாரம், தைப்பூசம் 108 திருவிளக்கு பூஜை, சிவராத்திரி, பங்குனியில் 10 நாட்கள் பிரம்மோற்சவம் என அனேக விசேடங்கள் சிறப்புற கொண்டாடப்படுகின்றன.

இரண்டு கால பூஜைகள் நடக்கிறது. பகல்வேளைகளில் எப்போது வேண்டுமானாலும் ஆலயத்தை தரிசிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தோல்வி கண்டு துவளும் மனங்களுக்கு வெற்றிக்கனி தர காத்திருக்கின்றார் ஸ்ரீ முன்குடுமீஸ்வரர்.

செங்கல்பட்டுமாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், திருக்கழுக் குன்றத்தில் இருந்து வல்லிப்புரம் வழியாக சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது பொன்விளைந்த களத்தூர். திருக்கழுகுன்றம் மற்றும் செங்கல்பட்டில் இருந்து இங்கு வர பேருந்து மற்றும் ஆட்டோ வசதி உள்ளது.

ஜோதிட கலாநிதி
மோ.கணேஷ் குருக்கள், ஆரணி.
தொடர்பு எண்:9789156179





# திருத்தணி, திருப்பேரூர் முருகன் கோவிலுக்கு இணையான

# முத்திகைநல்லான் குப்பம் முருகன்

திருக்கழுக்குன்றம்: முத்திகைநல்லான் குப்பம் முருகன் கோயில். திருக்கழுக்குன்றத்தில் இருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது, அருள்மிகு முத்துக்குமாரசாமி மலைக் கோயில்.

திருக்கழுக்குன்றத்திலிருந்து முத்திகை நல்லான் குப்பம் வழியாகவும், அம்மணம்பாக்கம் வழியாகவும் இந்த கோயிலுக்கு செல்லலாம். மலைமீது அமைந்துள்ள முருகன் கோயில் இது. கோயிலின் அடிவாரத்தில் ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோயில் உள்ளது.

அங்கிருந்து படி ஏறுகையில் மயில் சிற்பம் உள்ளது: அடிவாரத்திலிருந்து சுமார் 200 படிக்கட்டுக்கள் அமைந்துள்ளது. மலைக்கு 50 அடி தூரத்தில் தியான மண்டபம் திருமண மண்டபம் அமைந்துள்ளது.

திருமணம் காதுகுத்தல் பிற சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதாகவும் சினிமா படபிடிப்பும் அங்கு அடிக்கடி நடைபெறுவதாக சொன்னார்கள்.

மலைமீது சென்றதும் வள்ளி தெய்வானை யுடன் முருகன் நமக்கு அருள்பாலிக்கின்றார். கோயிலினை சுற்றி இயற்கை காட்சி அருமையாக உள்ளது. தூரத்தில் வேதகிரீஸ்வரர் மலைக்கோயில் தெரிகின்றது.




மலைமீது வாகனத்தில் செல்ல பாதை அமைத்து வருகின்றார்கள். முருகர் கோயிலுக்கு பின்னால் பெருமாள் கோயிலும் அடிவாரத்திலும் பெரிய குளமும் அமைக்க உள்ளார்களாம்.

வள்ளி தெய்வானையுடன் உள்ள முருகனை வேண்டினால் திருமணம் விரைவில் கைகூடுவதாக நம்பப்படுகிறது.

திருத்தணி முருகன் கோவிலுக்கு, திருப்பேரூர் முருகன் கோவிலுக்கு செல்ல முடியாதவர்கள் இங்குள்ள முருகனை சென்று வழிபடலாம்.

கிருத்திகை சஷ்டி இங்கு விஷேஷம். நேரம் கிடைக்கும் சமயம் சென்று வாருங்கள்.

– வேலன், போன்:
9894836096
திருக்கழுக்குன்றம்.



வேலன்



www.aanmeegamalar.com

# மருத்துவம்

❖ வாதநாரயண இலையைக் காய வைத்து தூளாக்கி ஐந்து கிராம் தூளை சுடுநீரில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர வாயுத்தொல்லை நீங்கும்.

❖ எட்டி மரக்கொழுந்து, மிளகு, பூண்டு இவைகளை நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து தலைக்கு குளித்து வர ஒற்றைத்தலைவலி தீரும்.

❖ அதிமதுரம் வில்லை அளவு துண்டு பால் விட்டு அரைத்து தலையில் தடவி 25 நிமிடம் கழித்து வெந்நீரில் 3 வாரம் குளித்து வந்தால் தலைபேன் போகும்.

❖ ஆலமரப்பட்டை, வேர்ப்பட்டை 40 கிராம் 2 லிட்டர் தண்ணீரில் போட்டு அரை லிட்டராக வற்றும் வரை காய்ச்சி இருவேளை குடித்து வர மேக எரிச்சல், மேகப்புண், வெள்ளைப்படுதல் குணமாகும்.

❖ உடல் சதை பிடிக்க 3 மாதம் தொடர்ந்து பூசணி சாப்பிடவும். உடல் மெலிய மந்தாரை வேரை நீர் விட்டு பாதியாக காய்ச்சி தொடர்ந்து அருந்தவும்.

❖ கசகசாவை எருமை தயிரில் அரைத்து இரவு படுக்கப்போகுமுன் தினசரி தடவி வந்தால் முக சுருக்கங்கள் நீங்கி முகம் பளபளப்புடன் ஜொலிக்கும்.

❖ பிராயன் மரப்பட்டையில் தைலம் செய்து அதில் சுக்கு, கடுக்காய், அரப்பொடி கலந்து பல் தேய்த்து வர பல் நோய் குணமாகும்.

❖ பச்சை மூங்கில் குச்சியை சிறு துண்டுகளாக வெட்டி நீர் விட்டு மைய அரைத்து செருப்பு கடியின் மீது தடவி வர குணமாகும்.

❖ கற்றாழை சாறையும் மஞ்சள் தூளையும் அரைத்து விளக்கெண்ணைய் விட்டு சூடு படுத்தி பூசி வர நகசுத்தி குணமாகும்.

❖ புரசவிதை, வாயுவிளாங்கத்தை பவுடராக்கி நெல்லிக்காய் பவுடர் சேர்த்து தேன் அல்லது வெண்ணெயுடன் சாப்பிட்டு வந்தால் என்றும் இளமையுடன் வாழலாம்.

❖ நெல்லிக்காய் லேகியம் சிறு உருண்டை காலை மாலை சாப்பிட்டு வர எலும்பு காய்ச்சல் குணமாகும்.





● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ–புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

ஆன்மிகமலர்

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ–மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

Gmail இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# நவக்கிரகங்களும் பரிகார பலன்களும்

ஒன்பது கிரகங்களின் கூட்டமைப்பே. "நவக் கிரகங்கள்" ஆகும். இந்த ஒன்பது கிரகங்களும் இந்துக்களின் வழிப்பாட்டுக்கு. உரியதாகும்.

நமது வாழ்க்கையில், நம்மை சுற்றி, நமது. உறவினர்கள் இருப்பது போல், இந்த நவக்கிரகங் களும் நம்மை சுற்றி உள்ளது.

1. சூரியன், 2. சந்திரன், 3.செவ்வாய், 4. புதன், 5. குரு, 6.சுக்கிரன், 7.சனி, 8.ராகு, 9.கேது. ஆகியவை ஆகும்.

இந்த நவக்கிரகங்கள் அனைத்தும் ஒரே கால கட்டத்தில் உருவானவை அல்ல பல ரிஷிகள், மற்றும் பல முனிவர்களுக்கு மகன்களாக பிறந்த வர்கள் ஆவர். இந்த நவக்கிரகங்கள், தாங்களே சுயமாக, தன்னிச்சையாக, யாருக்கும் எதுவும் செய்ய முடியாதவர்கள் ஆகும்.

ஆம் சிவபெருமானால் உபதேசிக்கப்பட்ட "பாவம்", "புண்ணியம்" என்னும் கணக்குகளின் படி, சிவபெருமான் கூறும் கட்டளைகளை நிறை வேற்றும் காரிய கர்தாக்கள் தான் இவர்கள்.

இவர்களால் உண்டாகும். தோஷங்களை, இவர்களின் தோஷ பரிகார தலங்களுக்கு சென்று வழி பட்டு. நிவர்த்தி பெறலாம், ஆனால் நம் தோஷங்களை போக்கி மன்னிக்கும் அதிகாரம் அதிதேவதைகளுக்கு மட்டுமே. உண்டு.

ஒவ்வொரு நவகிரகங்களை பற்றி. பார்க்கலாம்.

**சூரியன்:**

நவக்கிரகங்களில் முதலாமானவர் இவர், அதுபோல நவக்கிரகங்களின் நாயகரும் இவரே. இவரின் நிறம் சிகப்பு, இவரின் திசை கிழக்கு, ஆகும்.

இவர், ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில், தன் இரு மனைவிகளுடன் (உஷா, பிரத்யுஷா) கைகளில் தாமரை மலரை ஏந்தி கொண்டு வலம் வருவார். இவருக்குரிய கடவுள் சிவனும், அக்னியும், ஆகும்., இவருக்குரிய தானியம் கோதுமை, இவருக்குரிய ராசிக்கல் மாணிக்கம்,






இவருக்குரிய மலர் செந்தாமரை, இவருடைய பரிகார தலம், தமிழகத்தில். தஞ்சை. மாவட்டத் தில். "சூரியனார் கோயில்" ஆகும்.

அங்கு சென்று. வழிபாடு நடத்தி. சகல தோஷ பரிகாரம் பெறலாம்..

### சந்திரன்:

நவக்கிரகங்களில் இவர் இரண்டாமவர்ஆவார். இவர் இந்திரனின் சகோதரமும் கூட. இவர். 27 நட்சத்திர பெண்களை. மணந்து கொண்டாலும் "ரோகினியுடன்" மட்டுமே வாழ்பவர். தேய்வதும், வளர்வதும் இவரின் குணம், ஆதனால்தான். அமாவாசையும், பவுர்ணமியும், இவரால் உண்டா கிறது.

இவர் தனது இரு. கரங்களில் அல்லி மலரை. ஏந்தி, வரத முத்திரையுடன் காட்சி தருவார். இவர் மான்கள் பூட்டிய பத்து சக்கர தேரில் வலம் வருவார். இவருக்குரிய கடவுள் "வருணன்" இவருக்குரிய நிறம் வெள்ளை, இவருக்குரிய ராசிக்கல் முத்து.

இவருக்குரிய திசை வடமேற்கு, அறிவு மேன்மை, வாழ்க்கை வளங்கள் அளிக்க கூடிய வர். இவருக்கு உள்ள பரிகார தலம், "திங்களூர்" ஆகும். திங்களூர் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. அங்கு சென்று வழி பாடு நடத்தி தோஷ பரிகாரம் பெறலாம்.

### செவ்வாய்:

நவக்கிரகங்களில் இவர் மூன்றாமவர், இவரை "அங்காரன்" என்றும் கூறுவர். இவர் எட்டு குதி ரைகள் பூட்டிய ரதத்தில் வலம் வருவார். இவரின் முன்னிரு கரங்கள் அபய, வரத முத்திரைகள் காண்பிக்க, பின்னிரு கரங்களில் ஆயுதம் ஏந்தி காட்சி தருவார். பூமியின் மைந்தன் என்று இவரை சொன்னாலும், இவர் சிவனின் கண் களில் கோபகனலில் தோன்றியவர்.

இவருக்குரிய கடவுள் சுப்ரமணியர், இவருக் குரிய நிறம் சிகப்பு, இவருக்குரிய திசை தெற்கு, இவருக்குரிய ராசிக்கல் பவழம், இவருக்குரிய மலர் செம்பகபூ, இவர் தீராத நோய்களை குணப்படுத்துவதில் வல்லவர், இவருக்குரிய பரிகாரதலம் "வைத்தீஸ்வரன்கோயில்" ஆகும். தமிழகத்தில் நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறை அருகே வைத்தீஸ்வரன்கோயில் உள்ளது. அங்கு சென்று வழிபாடு நடத்தி தோஷ பரிகாரம் பெறலாம்.

### புதன்:

நவக்கிரகங்களில் இவர் நான்காமவர், இவர் மஞ்சள் ஆடை தரித்து நான்கு கரங்களுடன் தங்க ஆபரணங்களை அணிந்துகொண்டு சிம்ம வாகனத்தில் வலம் வருவார். இவர் எப்போதும் நன்மையை மட்டுமே செய்வார்.

இவருக்குரிய நிறம் பச்சை, இவருக்குரிய திசை வடக்கு, இவருக்குரிய பரிகார தலம், தமிழகத்தில் நாகை மாவட்டத்தில் திருவெண் காட்டில் உள்ளது. அங்கு சென்று வழிபாடு செய்து பரிகார தோஷம் பெறலாம்.

### குரு: (வியாழன்)

நவக்கிரகங்களில் இவர் ஐந்தாமவர் ஆவார். குருவை, வியாழன் என்றும் அழைப்பார்கள், தேவர்களுக்கு இவர் குரு, அங்கீரச மகிரி ஷிக்கும், சிரத்தாதேவிக்கும் மகனாக பிறந்தவர். இவர் பார்த்தாலே கோடி நன்மை என்பர் இவரின் வாகனம் மீன், இவரின் மலை முல்லை, இவரின் ராசிக்கல் புஷ்பராகம், இவரின் நிறம் மஞ்சள், இவரின் திசை வடகிழக்கு, இவர். நான்கு சக்கரங்கள் கொண்ட தேரில் வலம் வருவார் இவரின் நான்கு கரங்களில் மூன்றில் ஜெப மாலை, யோகதண்டம், கமண்டலம் ஏந்தியும், மற்றொரு கரத்தில் அபய ஹஸ்த முத்திரையுடன் காட்சி தருவார். இவருக்குரிய பரிகார தலம் தமிழகத்தில் கும்பகோணம், மன்னார்குடி சாலையில் "ஆலங்குடி" என்ற தலத்தில் உள்ளது. அங்கு சென்று வழிபாடு நடத்தி, கோடி நன்மை பெற்று பரிகார தோஷம் பெறலாம்.

**சுக்கிரன்:**

நவக்கிரகங்களில் இவர் ஆறாமவர் ஆவார் இவரை வெள்ளி என்றும் கூறு வார்கள். இவர் குருவாக இருந்தாலும், முக்கியமாக இவர் அசுரர்களின் குரு ஆவார். அதிர்ஷ்டத்தின் அடையாளம் இவர் ஒருவரின் ஜாதகத்தில் சுக்ரதசை என்றால், அவர்க்கு அதிர்ஷ்டம் வந்து கொண்டே இருக்கும். இவர் பிருகு மகரிஷி புலோமிசை ஆகியோரின் மகன் ஆவார். ஆம் இவர் அதிபுத்திசாலியும் கூட, ஒரு கண் உடைய இவர் எட்டு குதிரைகள்பூட்டிய ஐங்கோண வடிவ ரதத்தில் வலம் வருவார். இவரின் ராசிக்கல் வைரம், இவரின் மலர் வெண்தாமரை, இவரின் நிறம் வெள்ளை, இவரின் திசை தென்கிழக்கு ஆகும். இவருக்கான பரிகார தலம் தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள "கஞ்சனூர்" ஆகும். அங்கு சென்று வழிபாடு நடத்தி பரிகார தோஷம் பெறலாம்.



**சனி:**

நவக்கிரகங்களில் இவர் ஏழாமவர் ஆகும். பொதுவாக சனி, என்றாலே சங்கடங்களை தருபவர் என்ற எண்ணம் மக்களுக்கு உண்டு ஆனால்அது தவறு, இவர் எவருக்கும், தானே விரும்பி துன்பம் கொடுப்பவர் அல்ல, அவரவர்கள் செய்த, முந்திய வினை பயன்களின்படி அவரவர் துன்பம் அனுபவிக்க செய்பவர். ஆம் அவரவர் செய்த வினைகளை, அனுபவித்து தானே ஆக வேண்டும், இவரை மந்தன் என்றும் சொல்வார்கள் இவருக்கு பிடித்த ஆடையின் நிறம் கருப்பு. இவரின் கடவுள் பிரம்மா, இரு கரங்கள் உடைய இவர், வலது கரத்தில் தண்டம் ஏந்தி, இடது கரத்தில் வரத முத்திரையுடன் காட்சி தருவார். இவரின் நிறம் கருப்பு, இவரின் திசை மேற்கு, வாகனம் காக்கை, இவருக்கான பரிகார தலம் புதுவை மாநிலத்தில் "திருநள்ளாறு" ஆகும். அங்கு சென்று வழிபாடு நடத்தி, தோஷ பரிகாரம் பெறலாம்.

**ராகு:**

நவக்கிரகங்களில் இவர் எட்டா மவர், இவர் அருள் கிடைத்தால் போதும், அரசு பதவி தேடி வரும். இவர், குண்டலியின் அருள் தேவதை ஆகும். ராகுவை வணங்கினால், ஞானம் பெறலாம் என்பார்கள். மனிதர்கள் பெற்றுள்ள பாவங்களை களையவே, இவர் மனிதர்களுக்கு சங்கடங்களை தருகிறார்.


கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன்

அமாவாசை மற்றும் சனி கிழமை களில் அரச மரத்தடியில் பிரதிஷ்டை செய்து உள்ள நாகர் களை வழிபட்டால், வியாதிகள், துன்பங்கள் பறந்தோடும்.

இவருக்கான நிறம் கருப்பு, இவருக்கான திசை, தென்மேற்கு. இவருக்கான பரிகார தலம் தமிழகத் தில் கும்பகோணத்தை அடுத்த "திருநாகேசுரம் " ஆகும்.

அங்கு இவர், சிவனாக எழுந்தருளியுள்ளார். அங்கு சென்று வழிபாடு செய்து பரிகார தோஷம் பெறலாம்.

**கேது:**

நவக்கிரகங்களில் இவர் ஒன்பதாமவர் ஆவார். இவர் "பாம்பு" தலையும், "மனித" உடலும் கொண்டவர். இவர் மக்களுக்கு சகிப்பு தன்மையை அளிப்பவர். மிகவும் சூடானவர், இவரின் பார்வை ஜூவாலை போன்று இருக்கும். கருத்த நிறம் உடையவர், பத்து குதிரைகள் பூட்டிய ரத்தத்தில் வலம் வருபவர்.

கோபக்காரர், அதர்மத்தை பொறுக்க மாட்டார். இவருக்கான மலர் செவ்வல்லி, இவருக்கான ராசிக்கல் கோமேதகம், இவருக்கான கடவுள் வாயு, இவருக்கான நிறம் சிகப்பு, இவருக்கான திசை வட கிழக்கு. இவருக்கான பரிகார தலம்

தமிழகத்தில் திருவெண்காட்டின் அருகே உள்ள "கீழ்ப் பெரும் பள்ளம்" என்ற தலமாகும். அங்கு சென்று வழிபாடு செய்து பரிகார தோஷம் பெறலாம்.

நவக்கிரகங்களை சுற்றி வழிபடும் போது, முதலில் ஒன்பது சுற்றுகள் சுற்றி வலம் வந்த பின்னர், அந்த அந்த கிரகங்களுக்கு உரித்தான எண்ணிக்கையில் சுற்றி வலம் வர வேண்டும். சூரியனுக்கு பத்து சுற்றுகள்.

சந்திரனுக்கு, பதினொன்று சுற்றுகள், செவ்வாய்க்கு, ஒன்பது சுற்றுகள், புதனுக்கு, ஐந்து சுற்றுகள், குருவுக்கு, மூன்று சுற்றுகள், சுக்கிரனுக்கு, ஆறு சுற்றுகள், சனிக்கு, எட்டு சுற்றுகள், ராவுக்கு நான்கு சுற்றுகள் அது" அடி பிரதட்சிணம்" முறையில், கேதுவுக்கு, ஒன்பது சுற்றுகள் என்று அந்த அந்த கிரக பரிகாரம் முறையில் சுற்ற வேண்டும்.

கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன்,
பெங்களூரு 77.
தொடர்பு எண்: 99724 66443

# வேதகாலத்தில் எந்த தொழிலிலும் இழிந்ததாக கருதப்படவில்லை

விவசாயத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உடல் உழைப்பு அதிகம் தேவை. உடலால் உழைப்பவர்களை சூத்திரர்களை என்று வேதம் வகைபடுத்தி காட்டுகிறது. சூத்திரர்கள் தாழ்ந்தவர்களாக இழிகுல மக்களாக கருதப்பட்டு ஒதுக்கப்பட்டு இருந்தால் வேதங்கள் அவர்களையும் அவர்களது தொழில்களையும் சிறப்பித்து கூறப்பட்டிருக்குமா இருக்கவே முடியாது. எனவே வேதகாலத்தில் எவனும் எந்த தொழிலிலும் இழிந்தவனாக கருதப்படவில்லை என்பது நன்றாக விளங்குகிறது.

இனி சடங்குகள் என்பது அந்தகால மக்களுக்கு எந்த வகையில் உதவி புரிந்தன என்பதை பார்ப்போம். யஜூர் வேதம் 18வது அத்யாயத்தில் 77 பாடல்கள் இருக்கிறது. இதில் 29 பாடல்கள் சடங்குகளை பற்றியும் அவைகளால் ஏற்படும் நன்மைகளை பற்றியும் விவரித்து கூறுகிறது.

கிரிகைகள் எனக்கு கொடுப்பது எது? அவற்றை செய்வதினால் தெய்வங்களிடமிருந்து எதை நான் பெறுகிறேன். எல்லாம் எல்லாவற்றையும் நான் பெறுகிறேன். கிரிகையினால் பலத்தை நான் அடைகிறேன். ஆதாயம் அடைகிறேன். என் மனது ஆற்றல் அடைகிறது. உடல் பலம் அடைகிறது. எனது எண்ணங்கள் தெளிவடைகின்றன. எனக்கு புகழும் பாராட்டும் கிடைகிறது. ஒளிமயமான சொர்க்க கதவுகள் எனக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இதோ நான் நன்மையும் நன்மைக்கு மேல் நன்மையும் பெற்றுக் கொண்டே இருக்கிறேன். எனது மூச்சு காற்று தடங்கல் இன்றி உள்ளே செல்கிறது. சிரமப்படாடல் வெளியேயும் வருகிறது. அதன் பாதைகளில் அது தங்கும் இடங்களின் எந்த துன்பத்தையும் அனுபவிக்கவில்லை.

எனது கண்கள் தெளிவாக இருக்கிறது. நெருப்புத் துண்டுகள்






போல் அவைகள் ஜொலிக்கவும் செய்கின்றன. வில்லிலிருந்து புறப்படும் அம்புகளை போல் எனது பார்வை எல்லா இடங்களிலும் கூர்மையுடன் பாய்கின்றன. எனது காதுகளும் அப்படியே இருக்கின்றது.

இந்திரனின் கட்டளையால் மேகங்கள் மோதி உண்டாகும் இடி முழக்கங்களால் எனது செவிகள் துன்பப்படவில்லை. மிருதுவான இனிமையான புல்லாங் குழலின் ஓசை எனது காதுகளை குளிர்விக்கின்றன. எனது நாவும் நல்லதையே பேசுகிறது. தீய சொற் களை உருவாக்கும் வயலாக அது என்றும் மாறியது இல்லை.



யோகி ஸ்ரீ
ராமானந்த குரு

இத்தகைய நன்மையெல்லாம் பெற எனக்கு உதவியது எது. இந்த சடங்குகளும் இந்த யாகங் களும் தான். இதில் எரியும் நெருப்பு எல்லா இடத்திலும் இதமான வெப்பத்தை பரப்பட்டும். இதன் புகை நாலா புறமும் பரவி நறுமணமாக கமழட்டும்.

இன்னும் என்னவெல்லாம் எனக்கு கிடைக் கிறது தெரியுமா? அவைகளை எல்லாம்இதோ பட்டியலிட்டு சொல்கிறேன். இவைகள்உண்மைக்கு புறம்பான பொய்கள் அல்ல. உண்மையை போல் தோன்றும் கற்பனைகள் அல்ல. பயமும் தயக்கமும் இல்லாமல் இதை நான் சொல்லுவதினால் இவை அனைத்துமே உண்மைகள். என்றும் நிலைத்து இருக்கும் சத்தியங்கள்.

யாகங்களால் நான் உண்மை யென்னும் பேருலகில் நிலைத்து இருக்கிறேன். அது அசத்தியத்தில் இருந்து என்னை எப்போதும் பாதுகாவல் செய்கிறது. எனது சொற்களில் சத்தியம் மட்டுமே ஒலிப்பதனால் நான் எப்போதும் நாணயத்திடமிருந்து பிரியாமல் இருக்கிறேன்.

www.aanmeegamalar.com

தர்மத்தை மட்டுமே எனது




கண்கள் பார்ப்பதனால் நேர்மை என்ற காவல் படை என்னை சுற்றி எப்போதும் அரணாக இருக்கிறது. வெற்றியை தருவது சத்தியம் மட்டும் தான் என்பதனால் நான் அடைகின்ற ஒவ்வொரு வெற்றியுமே சத்தியத்தின் வடிவங்களாக மின்னுகிறது.




எனது பசுக் கூட்டத்தின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அதனால் எனது செல்வம் மிகுதியாகிறது. எனது சொத்துக்கள் பலமடங்கு பெருகுகிறது. எனது பொருட்கள் குவிவதனாலும் பெருகுவதானலும் நான் அதை அனைவரிடத்திலும் பகிர்ந்து கொள்கிறேன். அந்த பகிர்வு எனக்கு மகிழ்ச்சி பேரை தந்த வண்ணமே உள்ளது.

இந்த மகிழ்ச்சியினால் அதிகமான குழந்தை கள் எனது வீட்டில் பிறக்கின்றன. குழந்தைகளின் மழலை நாதம் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. மதுவை விட அதிகமான போதையும் பெண்ணை விட அதிகமான சுகத்தையும் வாரி தருவது குழந்தைகளின் அருகாமையும் மழலை மொழிகளும் தானே. குழந்தைகளே மனிதர்களின் சொர்க்கமாவார்கள்.

யாகங்களால் எந்த நோயும் என்னை அனுகாது அதனால் நான் பிணி என்ற பெரும் துன்பத்தை அனுபவிக்கவே மாட்டேன். எனது உடல் வலுவாக இருப்பதனால் எனது வலது கையில் இருக்கும் ஏர்முனை தானியங்களை உற்பத்தி செய்கிறது. இடது கையில் இருக்கும் கூர்மையான ஈட்டி எனது மக்களை பாதுகாக்கிறது.

எனது ஆயுள் பரிபூரணமாக இருக்கும். மரணம் எப்போது வந்தாலும் அதை எதிர்கொள்ள தயாராகவே இருக்கிறேன். ஏனென்றால் அது வாழ்வில் ஒருமுறை மட்டுமே வரக்கூடியது. தவிர்க்க முடியாத அதை எண்ணி நான் ஏன் வருத்தப்பட வேண்டும் எப்போதுமே நான் சுதந்திர காற்றை சுவாசிப்பவனாக இருக்கிறேன்.

நான் எவராலும வெல்ல முடியாதவன்என்னை அடிமையாக்கும் தகுதி எவருக்குமே இல்லை. எனக்குரிய பசுக்கள் மட்டுமல்ல எல்லாமே பெருகும். கல்லும், களி மண்ணும், குன்றுகள், பாறைகளும், தங்கமும், பித்தளையும், இரும்பும் இதர உலோகங்களும் நீரும், நெருப்பும் எப்போதுமே குறையாமல் எனக்காக பெருகிக் கொண்டே இருக்கும்.

இதே மாதிரியான பல விஷயங்களை பேசி கொண்டு செல்லும் யஜூர் வேதம் கடைசி பகுதிகளில் தெய்வத்துடனான சிந்தனையை ஒருமுகப்படுத்துகிறது. இறைவனுடன் ஆத்மா வானது இரண்டற கலந்தால் தான் நிரந்தர மான அமைதியும் சந்தோஷமும் கிடைக்குமென்று சொல்கிறது அப்படி பேசும் யஜூர் வேத பாடல் ஒன்றை சிந்தித்து பார்ப்போம்.

இந்த பூமியிலுள்ள எல்லாமே இறைவனின் படைப்புகள் தான் ஒரு சிறு மண் துகள்கள் கூட மனிதனால் உருவாக்கப்பட்டது அல்ல. அவன் படைத்தவற்றை வைத்து நாம் மகிழ்ச்சியை பெருக்கி கொள்கிறோம். அவன் படைப்பை நாம் அனுபவிக்க அயராது உழைக்க வேண்டும். உழைத்தால் தான் ஆயுள் கூடும். ஆரோக்கியம் பெருகும் உழைக்காமல் கிடந்தால் கல்லைப் போல் வாழ்ந்து காலனின் கைகளில் அகப்பட்டு அழிய வேண்டியது தான்.

மரணத்திற்கு பிறகு நாம் என்னவாக மாறுகிறோம் நமக்கு என்ன நேருகிறது. நாம் எங்கே போகிறோம். நமது பயனத்தின் விவரம என்ன என்ற கேள்விகள் அனைத்திற்கும் மா்ம முடிச்சுகளே பதிலாக கிடைக்கிறது. இந்த பதில்களை பற்றி கவலைபடாமல் இறைவனின் திருவடியே அடைவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அவனை போய் அடைவது மட்டுமே நமது பயணத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். அவன் இருக்கும் இடத்திலேயே நமது பயணம்




முடியும். அவன் எப்படி பட்டவன் எத்தகைய குண இயல்பு கொண்டவன் எதுவும் நமக்கு தெரியாது அவன் அசைவற்றவன். அதே நேரம் எல்லாவற்றையும் அசைத்து கொண்டிருப்பவன். அவன் நம்மிடமிருந்து தொலைவிலும் இருக்கிறான் அருகிலும் இருக்கிறான். அவன் எங்கும் நிறைந்தவனாக இருக்கிறான். அவன் இல்லாத இடம் என்றுபூமியிலும் ஆகாயத்திலும் எதுவுமே இல்லை.

இதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். அந்த புரிதல் தான் அறிவு அது தான் ஞானம். இந்த ஞானம் பிறந்து விட்டால் ஐயம் இல்லை, எண்ணம் இல்லை, குழப்பம் இல்லை எல்லாவற்றிற்குமே முற்று புள்ளி ஏற்பட்டுவிடும். அவனை பற்றிக்கொண்டால் அடைந்து விட்டால் உடல் என்ற கூடு நமக்கு இல்லை உடல் வேதனைகளும் ஆசைகளும் அவஸ்தைகளும் ஏற்படப்போவது இல்லை. ஏன் என்றால் பிறக்க வேண்டிய அவசியமே நமக்கு இல்லை. பிறப்பும் இறப்பும் இறப்பும் பிறப்பும் முற்றிலுமாக அழிந்தே விடுகிறது. நாம் ஒளிமயம் ஆகிவிடுவோம். மிகத்தூயதாக மாறிவிடுவோம்.

அதோ அந்த பொன் மயமான உலகத்தில் அவன் அமர்ந்து இருக்கிறான். அவனுக்கு அருகில் மிகப் பெரும் சிம்மாசனம் போடப்பட்டிருக்கிறது. அதில் நாமும் அவனும் சமமாக அமரலாம். அவனது இந்த உலகம் தான் சொர்க்கம். அவன் தான் அனைத்துமாய் ஆன பிரம்மம். அவனை அடைந்த பின் நமக்கு கிடைப்பது அழிவற்ற குழப்பமில்லாத அன்பு மயமான சாந்தி! சாந்தி! சாந்தி! மட்டுமே.

யஜுர் வேத பாடல்கள் அனைத்தும் கங்கை கரையில் மக்கள் பரவி வாழ்ந்த பிறகு உருவானவைகளாக இருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்ற கருத்தை இந்த பாடல்வகள் மெய்பிக்கின்றன. சிந்து நதி ஓரம் வாழ்ந்த போது 33 தேவதைகளை வழிபட்ட இவர்கள் யஜுர் வேத காலத்தில் சிந்தனை கூர்மைபட்டவர்களாக காணப்படுகிறார்கள்.

இவர்கள் வாழ்க்கையில் அபாயங்கள்குறைந்து அமைதி நிலவிய காலமாக இது இருந்திருப்பதினால் தான் மனம் இறைவனை பற்றி அவன் ஒருமையை பற்றி சிந்திக்க வழி ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவுகளையே இந்த பாடல்களின் மூலக் கருத்தாக அமைந்திருப்பதை நாம் காணலாம். இந்த யஜுர் வேத கருத்துக்கள் தான் நாளடைவில் ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள் உலகம் ஓர் இன்பகேணி என்ற கருத்துக்களின் விரிவாக்கமாக அமைந்திருக்கிறது. இனி நாம் சாம வேதத்தை பற்றி சிந்திப்போம்..

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**
மேலும் தொடர்பு கொள்ளவும்
**போன்: 09442426434**

ஆன்மிகமலர்
**ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ**
aanmeegamalar
YouTube
**யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம். நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து**
**பயன் பெறுங்கள்...**
ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share

# நண்பர்களை ஈர்க்க உங்களது குணத்தைச் செம்மையாக்குங்கள்

அன்பு குருதேவர் அருளுகிறார்: "சுயநலம் மற்றும் இதர அழகற்ற பண்புகள் என்ற கறைகளை உங்கள் சொந்த குணத்திலிருந்து அகற்றாமல் நீங்களே உண்மையான நண்பர்களை ஈர்க்க இயலாது. நண்பர்களை உருவாக்க மிகச்சிறந்த கலையானது நீங்களே தெய்வீகமாக ஆன்மீகமாக, தூய்மையாக, சுயநலமற்று நடந்துகொண்டு ஏற்கனவே ஒரு கடந்த வாழ்வில் நட்பின் அடித்தளம் போடப்பட்ட இடத்திலிருந்து நட்புறவைத் தொடர்வதுதான். எல்லா மனித உறவுகளிலும் நட்பு நிலவவேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளுக்கிடையில், கணவர்கள் மனைவிமார்கள் இடையில்,




ஆண்கள் ஆண்களுக்கிடையில், பெண்கள் பெண்களுக்கிடையில். அது நிபந்தனையற்றது. மற்றவர்களோடு நட்பு கொள்ளவேண்டும் என்ற தூண்டுதலை நீங்கள் பெறும்பொழுது இறைவனுடைய இருப்பைத்தான் நீங்கள் உணர்கிறீர்கள். நட்பு என்பது தெய்வீகத்தூண்டுதல் இறைவனானவன் தனது மனிதக் குழந்தைகளை பெற்றோர் மற்றும் இதர உறவினர்கள் உருவங்களில் மட்டும் பார்த்துக்கொள்வதில் மனநிறைவடைவதில்லை. நமது உள்ளங்களிலிருந்து, நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்த நமக்கு வாய்ப்புகள் தரும் வகையில் அவன் நண்பர்களாக வருகிறான்."

"எவ்வளவு அதிகம் உங்கள் மனிதக் குறைபாடுகள் விடுபட்டு தெய்வீக குணங்கள் உங்கள் வாழ்க்கையில் நுழைகின்றனவோ அவ்வளவு அதிகம் நண்பர்களை நீங்கள் பெற்றிருப்பீர்கள். கிருஷ்ணபிரான் புத்தபிரான் ஆகியோர் அவர்களைப்போல் இருப்பதற்கு மற்றவர்களுக்கான உங்கள் அன்பினை பூரணமாக்கவேண்டும். உங்கள் நட்பைப்பற்றி மற்றவர்களை நீங்கள் நம்பச் செய்யும்பொழுதும்; மேலும் காலத்தின் சோதனைகள் மற்றும் பகிர்ந்துகொள்ளப்பட்ட அனுபவங்கள் மூலம் ஒரு மனிதன் உங்களுக்காக ஆன்மாவிலிருந்து உணர்கிறார் என்பதை நீங்கள் நிச்சயமாக அறியும்பொழுதும், மற்றும் நீங்களும் அந்த மனிதனுக்காக அதே மாதிரியாக எந்த ஆதாயத்திற்கும் இல்லாமல் நட்பின் தெய்வீகத் தூண்டுதலுக்காக மட்டுமே உணர்ந்தால் நீங்கள் அந்த நட்பில் இறைவனின் பிரதிபலிப்பைக் காண்பீர்கள்."

இறைவன் அளிப்பதுபோல் எல்லோருக்கும் உங்கள் நட்பை அளியுங்கள்.

அன்புமிக்க குருதேவர் மேலும் அருளுகிறார்: "உங்கள் நட்பு ஒருவரிடம் மட்டுமே அடைபட்டிருக்க அனுமதிக்காதீர்கள், ஆனால் படிப்படியாக இந்த தெய்வீக உறவை உன்னத குறிக்கோள் கொண்ட மற்றவர்களிடமும் ஏற்படுத்துங்கள். தீய சிந்தையுள்ள மனிதர்களிடம் நட்பை வளர்க்க நீங்கள் முயற்சி செய்தால், நீங்கள் ஏமாற்றமடைவீர்கள். முதலில் உண்மையில் நல்லவர்களாக உள்ளவர்களிடம் நண்பர்களாக இருங்கள். பிறகு மற்றவர்களிடமும் ஒரு நண்பனாக இருக்கத் தொடங்கி எல்லோரிடமும் நட்பை உணரும் உரையிலும்,

மேலும் "நான் எல்லோருக்கும் நண்பன், என் எதிரிகளுக்கு கூட" என நீங்கள் கூறும் வரையிலும் நட்பை வளர்த்துங்கள். "உங்கள் சத்ருக்களை சினேகியுங்கள்; உங்களை சபிக்கின்றவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்டுத்துகிறவர்களுக்காகவும் பிராத்தனை செய்யுங்கள்."

மேலும் அவர் கூறுகிறார்: "உண்மையான நட்பு தெய்வீக அன்பாகும். ஏனென்றால், அது நிபந்தனையற்றது, உண்மையானது மற்றும் நிலைத்து நிற்பது. எமர்சன் இந்த லட்சியத்தை தனது கட்டுரைகளில் ஒன்றில் அழகாக எடுத்துரைத்துள்ளார். "நமது சகதோழர்களுடன் நாம் செய்துகொள்ளக்கூடிய மிக உயர்ந்த ஒப்பந்தம் யாதெனில் "நம் இருவருக்குமிடையில் இனி எப்பொழுதும் உண்மை நிலவட்டும்". மற்றவரைப்பற்றி நினைப்பதும், சொல்வதும் மிக உன்னதமாகும். நான் அவரைப் பார்க்கவோ அல்லது பேசவோ அல்லது அவருக்கும் கடிதம் எழுதவோ, என்றும் தேவையே இல்லை; நாங்கள் மீண்டும் எங்களைப் பலப்படுத்திக்கொள்ளவோ, அல்லது நினைவுப்பரிசுகளை அனுப்பவோ தேவையில்லை; நான் என்மீது சார்ந்திருப்பதைப்போலவே அவரைச் சார்ந்திருக்கிறேன். அவர் இதையோ அல்லது அதையோ செய்தாலும் அது சரியானது என்று அறிகிறேன். நீங்கள் ஒரு நண்பரிடம் சுதந்திரமாக, தவறாகப் புரிந்துகொள்ளாதவாறு பேச முடியும். ஆனால் ஒருவர் மற்றவரை அதிகாரம் செய்யும் ஏதாவது ஒரு குறிப்பு இருந்தால்கூட, நட்பு ஒரு போதும் வளராது. சுதநிதரம் மற்றும் ஆன்மீக சமத்துவம் இவற்றின் அடிப்படையில்தான் நட்பை வளர்க்க முடியும். ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரையும் அந்த தெய்வீக ஒளியில், ஒவ்வொரு மனிதனும் இறைவனது பிரதிபிம்பம் என்ற உணர்வு நிலையில் நடத்த வேண்டும். நீங்கள் எவரையாவது தவறாக நடத்தினால் அவருடன் நீங்கள் நட்பை என்றும் அறியமாட்டீர்கள்."

மேலும் அவர் தொடர்கிறார்: "அனேக மக்கள் நண்பர்களின்றியே வாழ்க்கையை கழித்து விடுகிறார்கள். அவர்களால் எப்படி அவ்வாறு தொடரமுடிகிறது என்பதை என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. உண்மையான நண்பர்கள் மிக அரிதாகவே நம்மை தவறாகப் புரிந்துகொள்வார்கள்: அவர்கள் அப்படிச் செய்தாலும், அது ஒரு சிறிது காலத்திற்கு மட்டுமே ஆகும். உங்கள் நம்பிக்கையை எவராவது தவறாகப்பயன்படுத்தினால், எப்பொழுதும் போல் உங்கள் அன்பையும், புரிந்துகொள்ளும் தன்மையையும், அதை நீங்கள் அவரிடமிருந்து பெறுவீர்கள் என்று நம்பிக்கையோடு அளித்துக்கொண்டேயிருங்கள். ஆனால் அந்த மனிதன் வெறுப்புடன் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்து, நீட்டப்பட்ட நட்புகரத்தை அறைந்துகொண்டேயிருந்தால், சிறிது காலத்திற்கு உங்கள் கரத்தை விலக்கிக்கொள்வது நல்லது."





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


அன்பு குருதேவரின் போதனைகளுக்கு இணையாக 'நல்ல நண்பர்கள்' என்ற தலைப்பிட்ட ஒரு சிறிய கதையை இங்கே கூற விழைக்கின்றேன்.

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் பாவண்ணன், மதியழகன், அறிவரசன் என்ற மூன்று புலவர்கள் இருந்தனர். அவர்கள் மூவருமே உயிருக்கு உயிரான நண்பர்களாக விளங்கினர். அந்நாட்டு அரசன் தன்னைப் புகழ்ந்து பாடிய பாவணணனுக்குப் பணப்பை ஒன்றைப் பரிசாக அளித்தான். வறுமையால் வாடிக்கொண்டிருந்த அறிவரசனின் மனைவி இதை அறிந்தாள். "உங்கள் நண்பருக்குப் பெரும் பொருள் பரிசாகக் கிடைத்துள்ளது. இங்கே

111
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக




நம் குழந்தைகளுக்கோ அடுத்த வேளை உணவு சாப்பிடப் பொருள் ஏதும் இல்லை. நமக்கு உதவி செய்யுமாறு உங்கள் நண்பருக்கு மடல் எழுதுங்கள்'' என்றாள்.

அதன்படி அறிவரசனும் மடல் எழுதி அதை பாவண்ணனுக்கு அனுப்பினான். பரிசுடன் வீடு வந்தான் பாவண்ணன். அங்கே உதவி கேட்டு நண்பன் எழுதிய மடல் அவனுக்காகக் காத்திருந்தது. அதைப் படித்த அவன், தான் கொண்டுவந்த பரிசுப் பொருள் அனைத்தையும் அறிவரசனுக்குக் கொடுத்து அனுப்பினான். அங்கிருந்த அவன் மனைவி, வந்த பரிசுப் பொருள் அத்தனையும் உங்கள் நண்பருக்கு அனுப்பி விட்டீர்களே! நம் வீட்டு வறுமை உங்களுக்குத் தெரியாதா? இரவு நாமும் நம் குழந்தைகளும் சாப்பிட என்ன செய்வது?'' என்று கேட்டாள்.

"கவலைப்படாதே'' என்று கூறிக்கொண்டு பாவண்ணன் தன் நண்பன் மதியழகனுக்குக் பொருள் உதவி கேட்டு மடல் எழுதினான். மதியழகனிடமும் அப்போது பணம் இல்லை. உடனே அவன் தன் இன்னொரு நண்பனான அறிவரசனுக்கு பொருள் உதவி கேட்டு மடல் எழுதினான். அப்பொழுதுதான் அறிவரசனுக்குப் பாவண்ணனின் பணப்பை வந்து சேர்ந்தது. தன் நண்பனின் மடலைப் பார்த்ததும் அந்தப் பணப் பையைப் பிரிக்காமல் அப்படியே பாவண்ணனுக்கு அனுப்பி வைத்தான்.

தான் அறிவரசனுக்கு அனுப்பிய பணப்பையே மதியழகனிடம் இருந்து வந்திருப்பதைக் கண்டு வியப்படைந்தான் பாவண்ணன். மதியழகனின் வீட்டிற்கும் சென்று அவன் நடந்த உண்மையைத் தெரிந்து கொண்டான். அந்தப் பணப் பையிலிருந்து தொகையை நண்பர்கள் மூவரும் சமமாகப் பிரித்துக் கொண்டனர்.

பார்த்தீர்களா! நண்பர்கள் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்! எவ்வளவு ஒற்றுமை! எவ்வளவு அன்பு! இதுதான் உண்மையான அன்பு! இதுதான் தெய்வீக அன்பு! இதுதான் உண்மையான நட்பு! அவர்கள் செயல் உண்மையான அன்பு மற்றும் நட்பின் அடையாளமாகத் திகழ்கிறது. நிறை குறைகள் கலந்ததுதான் வாழ்க்கை. இந்தக்கதையில் கூறப்படும் நண்பர்கள் தம் குணத்தைச் செம்மைப்படுத்திக்கொண்டுள்ள தனால்தான் அவர்கள் பரஸ்பரம் உதவ முடிந்தது.



குருப்ரியா

அவர்களுள் தெய்வீக அன்பு நிறைந்திருந்தது. அதனால்தான் பொருளையும் சமமாகப் பிரித்தெடுத்தனர். "இறைவன் அளிப்பதுபோல் உங்கள் அன்பை அல்லது நட்பை எல்லோருக்கும் அளியுங்கள்'' என்று ப்ரிய குருதேவர் கூறுவது சிறப்பு. இந்தக் கதையில் கூறப்பட்டுள்ள நண்பர்கள்போல் இவ்வுலகத்தில் வாழும் மனிதர்கள் நண்பர்களக மாறினால் எதற்கும் எப்பொழுதும் துன்பம் ஏதும் இல்லை. இந்த உதாரணத்தை ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் கடைபிடித்தால் இறைவன் மகிழ்வான். அதனால் அதைக் கடைபிடிப்பவர்களுக்கும் நன்மையையும் மகிழ்ச்சியையும் இறைவனே அளிப்பான் என்பது உறுதி!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

www.aanmeegamalar.com

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.



தொடர்பு கொள்ள வேண்டிய எண்:

**9444228203**

# ஆன்மீக வாழ்க்கை என்றால் என்ன?

புலனின்பமே பிரதானம்” என்ற மோகத்தில் மயங்கியோர் மத்தியில் ஆன்மீக விஷயங்களுக்கு புத்துயிரளித்து, மனித வாழ்வின் உண்மையான குறிக்கோளான கிருஷ்ண பக்தியைத் தூண்டி, குழப்பங்கள் குடிகொண்ட கலி யுகத்தின் தற்போதைய நிலைக்குத் தகுந்தாற் போல கிருஷ்ண பக்தி வாழ்க்கையை நடைமுறைப்படுத்தி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் இருப்பிடத்திற்கு உயிர்வாழிகளைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் தன் வாழ்நாள் முழுவதும் அரும்பாடுபட்ட ஆன்மீக குருவே ஸ்ரீல பிரபுபாதர்.

இஸ்கான் எனப்படும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை நிறுவி உலகெங்கிலும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரமங்கள், கல்வி நிறுவனங்கள், ஆலயங்கள் அமைத்துள்ளார். 1896 ஆம் ஆண்டு இந்தியாவின் கல்கத்தா நகரில் பிறந்த இவரது ஆசான் பக்தி சித்தாந்த சரஸ்வதி கோசுவாமி ஆவார். பக்தி சித்தாந்த சரஸ் வதி கோசுவாமி மிகப்பெரிய ஞானியாகவும், அறுபத்து நான்கு கௌடிய மடம் என்றறியப்படும் வைதீக நிறுவனங்களை (சென்னை உட்பட) நிறுவியவர்.

பிரபுபாதா, 1933–ல் அலகாபாத் நகரில் அவரது தீட்சை பெற்ற சீடரானார். பிரபு பாதா டெக்சாசில் டல்லஸ் நகரில் குருகுலப்பள்ளியை நிறுவி ஆதார, இடைநிலைக் கல்வியில் வைதீக முறையை மேற்கத்திய நாடுகளில் அறிமுகம் செய்தவர்.

உலகெங்கும் இயங்கிவரும் இப் பள்ளிகளின் கேந்திரம் இந்தியாவில் பிருந்தாவனம் என்னுமிடத் தில் நிறுவப்பட்டுள்ளது. பிரபுபாதாவின் இலக்கியத் தொண்டு மிகவும் குறிப்பிடத் தக்கவை. இந்திய இதிகாசங்கள் பலவற்றை இவர் ஆங்கில மொழி யில் மொழிபெயர்த்துள்ளர். இவரது நூல்கள் உலக பாடசாலைகள் பலவற்றில் மேற்படிப்புக்கான பாடப் புத்தகங்களாக வைக்கப்பட்டுள்ளன.

இவை நாற்பதுக்கும் மேற்பட்ட உலக மொழி களில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன. 1972–இல் நிறுவப்பட்ட பக்தி வேதாந்த புத்தக நிறுவனம் பிரபு பாதாவின் நூல்களை மட்டும் வெளியிடுவதிலேயே இந்திய மத, தத்துவ ஞான நூற்களை வெளியிடும் உலகின் மிகப் பெரிய நூல் வெளியீட்டு நிறுவனமாகப் பெயர் பெற்றுள்ளது. பிரபுபாதா ஆறு



கண்டங்களிலும் பதினான்கு முறைகளுக்கு மேல் பயணம் செய்து கிருஷ்ண பக்தி பற்றி உரை யாற்றியுள்ளார்.

மிகப்பெரிய கிருஷ்ண பக்தரான இவரிடம் கொல்கத்தாவைச் சேர்ந்த ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி எடுத்து வெளியிட்டுள்ளார்.

அந்தப் பேட்டி தற்காலத்திற்கு மிகப்பொருத்த மாக உள்ளது. அந்தப் பேட்டியைப் பார்ப்போம்.

❖ ❖ ❖

நிருபர்: ஓர் உண்மையான குரு ரோல்ஸ் ராய்ஸ் காரில் பயணம் செய்வதையோ, சொகுசு ஒட்ட லில் ஆடம்பரமான அறையில் தங்குவதையோ எவ்வாறு புரிந்துகொள்வது?

ஸ்ரீல பிரபுபாதர்: சில வேளைகளில் முதல் தரமான ஒட்டலில் மக்கள் எங்களுக்கு ஏற்பாடு செய்கிறார்கள்; ஆனால் பொதுவாக நாங்கள் எங்கள் கோயில்களிலேயே தங்குவது வழக்கம். உலகம் முழுவதும் எங்களுக்கு சுமார் நூறு கோயில்கள் உள்ளன. எனவே, எந்த ஒட்டலுக்கும் செல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை.

❖ ❖ ❖

நிருபர்: நான் உங்களைக் குற்றம் சொல்ல விரும்பவில்லை. உதாரணத்திற்காகத்தான் கூறினேன். உங்களுடைய எச்சரிக்கை மதிப்பு மிக்கதாகும். ஆன்மீக வாழ்வை தேடுவதில் ஆர்வ முடையவர்கள் பலர் உள்ளனர், அதே வேளையில், குரு வியாபாரத்தில் பணம் சம்பாதிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளவர்களும் பலர் உள்ளனர்.

ஸ்ரீல பிரபுபாதர்: மக்கள் ஆன்மீக வாழ்க்கை என்ன என்பதை அறியாமல் இருப்பதே இதற்கு காரணமாகும். ஆன்மீக வாழ்க்கை என்றால் என்ன என்று நான் உங்களிடம் வினவினால், நீங்கள் என்ன பதில் சொல்வீர்?

❖ ❖ ❖

நிருபர்: நல்ல கேள்வி, எனக்கு சரி யாகத் தெரியாது.

ஸ்ரீல பிரபுபாதர்: ஆன்மீக வாழ்க்கை என்றால் என்ன என்பதை அறியாத போதிலும், நீங்கள் ‘இது அது,’ என்று கூறுகிறீர்கள். ஆன்மீக வாழ்க்கை என்றால் என்ன என்பதை நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் இந்த உடல் அல்ல என்பதைப் புரிந்துகொள்ளும்போது ஆன்மீக வாழ்க்கை தொடங்குகிறது. இதுவே ஆன்மீக வாழ்வின் உண்மையான தொடக்கம். உங்களுடைய ஆத்மாவிற்கும் உடலுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்து, நீங்கள் ஓர் ஆன்மீக ஆத்மா என்பதை உணரத் தொடங்குங்கள்.

❖ ❖ ❖

நிருபர்: இந்த ஞானம் ஒவ்வொருவரின் கல்வி யின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ஸ்ரீல பிரபுபாதர்: ஆமாம், மக்களுக்கு முதலில் தாங்கள் யார் என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் தங்களின் உடலா? அல்லது வேறு ஏதாவதா? இதுவே கல்வியின் தொடக்கம். தற்போது ஒவ்வொருவரும் தன்னை உடல் என்று நினைக்கும்படி கற்பிக்கப்படுகின்றனர். தற் செயலாக அமெரிக்கனின் உடலைப் பெற்றிருப்ப தால், ஒருவன் நினைக்கின்றான், “நான் ஓர் அமெரிக்கன்.” நீங்கள் சிகப்பு நிறச் சட்டையை அணிந்திருப்பதால், அந்த சட்டையே நீங்கள் அல்ல, நீங்கள் ஒரு மனிதன். அதுபோலவே இந்த உடலானது உண்மையான



நபரின் மீது இருக்கும் ஒரு சட்டை அல்லது கோர்ட்டைப் போன்றதாகும். நாம் நமது சட்டையின் மூலமாக நம்மை அடையாளப்படுத்திக் கொண்டால், நம்மிடம் ஆன்மீகக் கல்வி ஏதுமில்லை என்றுதான் பொருள்.

❖ ❖ ❖

நிருபர்: அம்மாதிரி கல்வி பள்ளிகளில் தொடங்கப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

ஸ்ரீல பிரபுபாதர்: ஆமாம். பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் முதலியவற்றில் கற்றுத் தரப்பட வேண்டும். இவ்வகையான பாடத் திற்கு அளவு கடந்த நூல்கள் உள்ளன. சமுதாயத் தலைவர்கள் இந்த இயக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே தற்போதைய தேவையாகும்.

❖ ❖ ❖

நிருபர்: இதற்கு முன்பு போலி குருவின் தொடர்பிலிருந்தவர் யாரேனும் உங்களிடம் வந்த அனுபவம் உண்டா?

ஸ்ரீல பிரபுபாதர்: ஆமாம், பல பேர் வந்துள்ளனர்.

❖ ❖ ❖

நிருபர்: அந்த போலி குருவினால் அவர்களின் ஆன்மீக வாழ்க்கை கெட்டுப் போனதுண்டா?

ஸ்ரீல பிரபுபாதர்: இல்லை, அவர்கள் உண்மையாகவே ஆன்மீக விஷயங்களைத் தேடிக் கொண்டிருந்தனர்; அதுவே அவர்களின் தகுதி. கடவுள் ஒவ்வொருவரின் இதயத்திலும் இருக்கிறார்; உண்மையாகவே யாராவது அவரைத் தேடினால், அந்த நபருக்கு பகவான் ஓர் உண்மையான ஆன்மீக குருவைக் கண்டுபிடிப்பதில் உதவுகிறார்.

❖ ❖ ❖

நிருபர்: தங்களைப் போன்ற உண்மையான குருமார்கள் போலி குருக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, அதாவது அவர்களை தங்களது தொழிலிலிருந்து வெளியேற்றுவதற்கு நீங்கள் எப்போதாவது முயற்சித்ததுண்டா?

ஸ்ரீல பிரபுபாதர்: இல்லை, அஃது என் நோக்கமல்ல. நான் வெறுமனே ஹரே கிருஷ்ண என்று கீர்த்தனம் செய்து இந்த இயக்கத்தினை தொடங்கினேன். நியூயார்க் நகரத்திலுள்ள டாம்ப்கின்ஸ் சதுக்கம் என்ற இடத்தில், நான் ஹரே கிருஷ்ண கீர்த்தனத்தில் ஈடுபட்டேன். விரைவில் மக்கள் என்னிடம் வரத் தொடங்கினர். இவ்வாறாக, இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் படிப் படியாக வளர்ந்தது. பலர் ஏற்றுக் கொண்டனர், பலர் ஏற்கவில்லை, அதிர்ஷ்டம் உள்ளவர்கள் ஏற்கின்றனர்.




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

❖ ❖ ❖

நிருபர்: ஏமாற்றும் குருமார்களிடம் ஏற்பட்ட அனுபவத்தினால் மக்கள் சந்தேகப்படுகிறார்கள் என்பதை நீங்கள் உணரவில்லையா? ஒரு போலியான பல் மருத்துவரிடம் சென்று, அவர் உங்களது பல்லை உடைத்து விட்டால், நீங்கள் வேறொரு பல் மருத்துவரிடம் செல்லும் போது சந்தேகக் கண்களுடன் பார்க்க மாட்டீர்களா?

ஸ்ரீல பிரபுபாதர்: ஆமாம், அஃது இயல்புதான். நீங்கள் ஏமாற்றப்பட்டால், நிச்சயம் சந்தேகம் கொள்வீர்கள். ஆனால் நீங்கள் ஒரு முறை ஏமாற்றப்பட்டு விட்டால், எப்போதுமே ஏமாற்றப் படுவீர்கள் என்று நினைக்க முடியாது.

உண்மையான ஒருவரைக் கண்டுபிடித்தல் அவசியம். ஆனால் கிருஷ்ண உணர்விற்கு நீங்கள் வர வேண்டுமானால், நீங்கள் மாபெரும் அதிர்ஷ்ட சாலியாக அல்லது இந்த விஞ்ஞானத்தைப் பற்றி அறிந்தவராக இருக்க வேண்டும். இதுபோன்ற உண்மையைத் தேடுபவர்கள் மிகவும் குறைவு என்பதை நாங்கள் பகவத் கீதையிலிருந்து அறிகிறோம், மனுஷ்யானாம் ஸஹஸ்ரேஷு கஷ்சித் யததி ஸித்தயே, இலட்சக்கணக்கான மக்களில் யாராவது ஒருவர்தான் ஆன்மீக வாழ்வில் ஆர்வத்துடன் இருப்பார்.

பொதுவாக மக்கள் உண்பது, உறங்குவது, உடலுறவில் ஈடுபடுவது, தற்காப்பில் ஈடுபடுவது ஆகியவற்றில்தான் ஆர்வமுடையவர்களாக உள்ளனர். எனவே, எங்களால் எவ்வாறு அதிக சீடர்களை எதிர்பார்க்க முடியும்? மக்கள் தங்களின் ஆன்மீக ஆர்வத்தை இழந்து விட்டார்கள்

என்பதைக் காண்பது கடினமானதல்ல. மேலும், உண்மையான ஆர்வத்துடன் இருப்பவர்களில் பெரும்பாலானோர் ஆன்மீகவாதிகள் எனப்படும் போலிநபர் களால் ஏமாற்றப்படுகின்றனர். ஓர்இயக் கத்தினை அதைக் கடைபிடிக்கும் நபர் களின் எண்ணிக்கையை வைத்துஎடை போட முடியாது. ஒரே ஒரு நபர் உண்மையான வராக இருந்தால்கூட, அந்த இயக்கம் வெற்றியடைகிறது. இஃது எண்ணிக் கையைப் பொறுத்த விஷயம் அல்ல, தரத்தைப் பொறுத்தது.

❖ ❖ ❖

நிருபர்: எவ்வளவு பேர் இந்த போலி குருமார் களால் ஏமாற்றப்பட்டிருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ஸ்ரீல பிரபுபாதர்: ஏறக்குறைய அனைவருமே (சிரிப்பு). இலட்சக்கணக்கான மக்கள் ஏமாற்றப் பட்டுள்ளனர்; ஏனெனில், அவர்கள் ஏமாற்றப்பட விரும்பினர். கடவுள் எல்லாம் அறிந்தவர், அவரால் உங்களது விருப்பத்தை அறிய முடியும். அவர் உங்களது இதயத்தினுள்ளே இருக்கின்றார்; நீங்கள் ஏமாற்றப்பட விரும்பினால், கடவுள் ஓர் ஏமாற்றுக்காரனை அனுப்பி வைப்பார்.

❖ ❖ ❖

நிருபர்: மக்கள் தங்களது உலக விஷயங்களில் ஈடுபட்ட வண்ணம் ஏதோ ஒரு மந்திரத்தை உச்சரிப்பதால், அல்லது ஒரு பூவைக் கையில் ஏந்துவதால் ஆன்மீக வாழ்வை அடையலாம் என்று நினைக்கின்றனர். இதுதான் மக்கள் ஏமாற்றப்பட விரும்புகின்றனர் என்று நீங்கள் கூறுவது அர்த்தமா?

ஸ்ரீல பிரபுபாதர்: ஆமாம். இது "நான் எனது நோயிலேயே இருப்பேன், அதே வேளையில் நான் குணமடைவேன்," என்று ஒரு நோயாளி கூறுவதைப் போன்றதாகும். அவர்களின் எண்ணம் முரண்பட்டதாகும். ஆன்மீக வாழ்வை அறிந்துகொள்வதற்கு மக்களுக்கு முதலில் பயிற்சியளிக்கப்பட வேண் டும். ஆன்மீக வாழ்க்கை என்பது சில நிமிடங்கள் பேசுவதால் புரிந்து கொள்ளப்படும் விஷயம் அல்ல, இதற்கு பல தத்துவபூர்வமான வேத சாஸ்திரங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் மக்களுக்கு ஆர்வம் இல்லை, இதுவே பிரச்சனை. உதாரணமாக, ஸ்ரீமத் பாகவதம் என்பது மிகப்பெரிய நூல்; நீங்கள் இதைப் படிக்க முயற்சித்தால் அதன் ஒரு வரியைப் புரிந்துகொள்ள உங்க ளுக்கு பல நாள்கள் ஆகலாம். ஸ்ரீமத் பாகவதம் கடவுளைப் பற்றிய பூரண உண்மையை விளக்குகிறது. ஆனால் மக்கள் இம்மாதிரி இலக் கியங்களில் ஆர்வமாக இல்லை.



யாராவது ஒருவர் ஆன்மீக வாழ்வில் ஆர்வமுடையவராக இருந்தால்கூட, அவர் உடனடி பலன்களையும் மலிவான விஷயங்களையும் விரும்புகிறார். எனவே, அவர் ஏமாற்றப்படுகிறார்.

உண்மையில் மனித வாழ்க்கை என்பது தவத்திற்காகவும் விரதங்களுக்காகவும் உள்ளதாகும். அதுவே வேதப் பண் பாடாகும். வேதப் பண்பாட்டில் இளை ஞர்களுக்கு பிரம்மசாரிகளாக இருப்பதற்கு பயிற்சியளிக்கப்படுகிறது, இருபத்தைந்து வயது வரை காம வாழ்க்கைக்கு அனுமதி கிடையாது. அந்த மாதிரியான கல்வி தற்போது எங்குள்ளது? பிரம்மசாரி என்பவன் முழு பிரம்ம சரியத்தைக் கடைபிடித்து வாழும் ஒரு மாணவன். அவன் குருகுலத்தில் குருவின் கட்டளைகளுக்குப் பணிந்து நடப்பான். தற்போது பள்ளிகளும் கல்லூரிகளும் துவக்கத்தில் இருந்தே காமத்தைக் கற்றுக் கொடுக்கின்றன. பன்னிரண்டு, பதின்மூன்று வயதில் இளைஞர்களும் யுவதிகளும் காமத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களால் எவ்வாறு ஆன்மீக வாழ்க்கையைப் பெற முடியும்? ஆன்மீக வாழ்க்கை என்பது கடவுளை உணர்வதற்காக தாமாகவே முன்வந்து சில கட்டுப்பாடுகளை ஏற்பதாகும். அதனால்தான், நாங்கள் தகாத உடலுறவு கூடாது, மாமிசம் கூடாது, சூதாடுதல் கூடாது, போதை வஸ்துக்கள் கூடாது என்று வலியுறுத்துகிறோம். இம்மாதிரியான கட்டுப்பாடுகளின்றி, எந்த வொரு யோக தியானம், அல்லது ஆன்மீக ஒழுக்கங்களும் உண்மை யானதாக இருக்க முடியாது. அஃது ஏமாற்றுபவருக்கும் ஏமாற்றப் படுபவருக்கும் இடையிலான வெறும் ஒப்பந்தமாகவே இருக்கும்.

❖ ❖ ❖

நிருபர்: மிக்க நன்றி!

ஸ்ரீல பிரபுபாதர்: ஹரே கிருஷ்ணா

❖ ❖ ❖



கீதா-ராஜன்

தொகுப்பு: கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# சூரிய ஒளியில் நிற்பதால் கிடைக்கும் நன்மைகள்




சமீபத்திய ஆராய்ச்சி ஒன்று மன அழுத்தத்தை குறைக்க அனைவரையும் இயற்கையை ரசிக்க எடுத்துரைக்கிறது.

நீர்வீழ்ச்சி, மரங்கள், மலைகள் போன்றவற்றை காணும் போது மன அழுத்தம் குறைவதாக தகவல் வெளியிட்டுள்ளது.

## சூரிய ஒளியினால் கிடைக்கும் 15 நன்மைகள்

| | |
|---|---|
| 1. | ரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது |
| 2. | நல்ல உறக்கம் பெற |
| 3. | மூளைச் செயல்பாட்டை அதிகரித்தல் |
| 4. | அல்சீமர் நோய் ஏற்படும் ஆபத்தைக் |
| 5. | தோல் குறைபாடுகளை குணப்படுத்தும் |
| 6. | குழந்தைகளின் வளர்ச்சிக்க உதவுகிறது |
| 7. | நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் |
| 8. | புற்றுநோய் வரும் ஆபத்தைக் |
| 9. | டைப் 2 வகை நீரிழிவு நோய் |
| 10. | நம் மனநிலையை மேம்படுத்துகிறது |
| 11. | உடல் பருமனைக் குறைக்க உதவும் |
| 12. | எலும்புகளின் வலுவை அதிகரிக்கும் |
| 13. | கண் ஆரோக்கியத்திற்குலீஉதவுகிறது |
| 14. | மன அழுத்தத்தை எதிர்த்து போராடும் |
| 15. | பருவகால பாதிப்புக் கோளாறுகளை |






பூமியில் எப்படி நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து சக்திகள் ஒன்றை ஒன்று ஈர்த்து பூமியாகி செயல்படுகிறதோ அதே போல் இந்த உடலில் கீழ்கண்டவாறு பஞ்சபூத சக்திகள் செயல்படுகின்றன.

| | |
|---|---|
| ஆகாயம் | காமம், குரோதம், மோகம், மதம், மாச்சர்யம் |
| காற்று | இருத்தல், நடத்தல், படுத்தல், எழுதல், ஓடல் |
| நெருப்பு | பயம், சோம்பல், பசி, உறக்கம், புணர்ச்சி |
| நீர் | உதிரம், மூளை, உமிழ்நீர், கொழுப்பு, சுக்கிலம் |
| மண் | மயிர், தோல், நரம்பு, எலும்பு, தசை |

பூமியின் இயக்கத்திற்கு இரவு, பகல் என மாறி மாறி சூரிய சந்திரர்கள் செயல்படுவதால் பூமியின் செயலும், ஜீவராசிகளும் வாழ்கின்றன.

அதே போல மனித உடலான பிண்டத்திலும் இடகலை என்கிற சூரியகலையும், பிங்கலை என்கிற சந்திர கலையும் மாறி மாறி சுவாசம் நடைபெறுவதால் மனித பிண்டம் இயங்குகிறது.

பூமியில் 12 மணி நேரத்திற்கு ஒருமுறை இரவும் பகலும் மாறி மாறி செயல்படுவதுபோல் இந்த மனித உடலில் சூரியகலை, சந்திரகலை, சுவாசம், இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை மாறி மாறி செயல்படும்.

ஆகவே மேற்கண்ட விளக்கத்தின் மூலம் எந்த சூரிய, சந்திரன் ஆற்றல் பூமியை இயக்குகிறதோ அதே ஆற்றல்தான் இந்த மனித உடலையும் இயக்குகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# தலைமுறை தலைமுறையாக தொடரும் 42 பாவங்கள்: மறந்தும் இதை செய்யாதீர்கள்

| | |
|---|---|
| 1. | நல்லவர் மனத்தை நடுங்க வைப்பது. |
| 2. | வலிய வழக்கிட்டு மானம் கெடுப்பது. |
| 3. | தானம் கொடுப்போரைத் தடுத்து நிற்பது. |
| 4. | தாய் தந்தையை பழித்து தள்ளி வைத்தல். |
| 5. | மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்வது. |
| 6. | குடிமக்களிடம் வரி உயர்த்திக் கொள்ளையடிப்பது. |
| 7. | ஏழைகள் வயிறு எரியச்செய்வது. |
| 8. | தருமம் பாராது தண்டிப்பது. |
| 9. | ஒரு தலைச் சார்பாக வழக்குரைப்பது. |
| 10. | உயிர்க் கொலை செய்பவர்க்கு உபகாரம் செய்வது. |
| 11. | களவு செய்பவர்க்கு உளவுகள் சொல்வது. |
| 12. | பொருளை இச்சித்துப் பொய் சொல்வது. |
| 13. | ஆசை காட்டி மோசம் செய்வது. |
| 14. | பொது வழியை மூடி அடைப்பது. |
| 15. | வேலை வாங்கிக்கொண்டு கூலி குறைப்பது. |
| 16. | பசித்தோர் முகத்தைப் பாராமல் இருப்பது. |
| 17. | இரப்பவர்க்குப் பிச்சை இல்லை என்பது. |
| 18. | கோள் சொல்லிக் குடும்பத்தைக் குலைப்பது. |
| 19. | நட்டாற்றில் கை நழுவுவது. |
| 20. | கலங்கி ஒளிந்தவரைக் காட்டிக் கொடுப்பது. |
| 21. | கற்பிழந்தவளோடு கலந்துறைவது. |
| 22. | காவல் கொண்ட கன்னியை கற்பழிப்பது. |
| 23. | கணவன் வழி நிற்பவளைக் கற்பழிப்பது. |
| 24. | கருவைக் கலைப்பது. |
| 25. | குருவை வணங்கக் கூசி நிற்பது. |

www.aanmeegamalar.com

| | |
|---|---|
| 26. | குருவின் காணிக்கை கொடுக்க மறுப்பது. |
| 27. | கற்றவர் தம்மிடம் கடுப்போடு நடப்பது. |
| 28. | பட்சியைக் கூண்டில் பதைக்க அடைப்பது. |
| 29. | கன்றுக்குப் பாலூட்டாமல் கட்டி அடைப்பது. |
| 30. | ஊன் சுவை உண்டு உடல் வளர்ப்பது. |
| 31. | கல்லும் நெல்லும் கலந்து விற்பது. |
| 32. | அன்புடையவர்க்குத் துன்பம் செய்வது. |
| 33. | குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்ப்பது. |
| 34. | வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சத்தை அழிப்பது. |
| 35. | பகை கொண்டு அயலவர் பயிர் அழிப்பது. |
| 36. | பொது மண்டபத்தைப் போய் இடிப்பது. |
| 37. | ஆலயக் கதவை அடைத்து வைப்பது. |
| 38. | சிவனடியாரைச் சீறி வைவது. |
| 39. | தவம் செய்வோரைத் தாழ்வு சொல்வது. |
| 40. | சுத்த ஞானியரைத் தூஷணம் செய்வது. |
| 41. | கலந்த சிநேகிதருள் கலகம் உண்டாக்குவது. |
| 42. | தெய்வத்தை இகழ்ந்து செருக்கு அடைவது. |

www.aanmeegamalar.com





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”

aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

# மரம் வளர்க்க ஆரம்பிக்கும்பொழுதே பழத்திற்கு எவனாவது அழுவானா?

மரணத்தின்போது தான் ஜாதி மனிதனை விட்டு அதனளவில் பிரிகிறது. ஆனால் மனிதன் அதைப் பிரிப்பதில்லை. இதுதான் நாம் செய்த பாவம். இதுபோக என்ன செய்ய வேண்டும் தெரியுமா? ஒன்றும் அறியாத பச்சைக்குழந்தை நிலையிலிருந்தே இத்தன்மையைப் பற்றி அனைவரிடமும் பிரச்சாரம் செய்ய வேண்டும். இந்த முறை நேர்மையாக செயல்படுத்தப்பட்டால் ஜாதி உணர்வு இந்தியாவை விட்டு ஒழியும்.

❖❖❖

மனிதனின் உடற்கூறு சாஸ்திர ஆராய்ச்சியில் இந்த ஜாதிக்கு வேர் உள்ளது என்று கண்டுபிடிக்க முடியுமா? ஆம் கண்டுபிடிக்க முடியும். குணம் என்ற தன்மையில் இதற்கு வேர் ஒட்டிக் கொண்டிருக்கிறது. குணத்தினுடைய வேரிலிருந்து ஜாதி துவங்கி அதுவே பரம்பரையாய் மனிதனிடத்திலிருந்து திருமண முறைக்குத் தாவி அங்கே குழந்தை உற்பத்திக்காக இருபாலரிடம் இருந்து தோன்றும், அதிலும் குறிப்பாக ஆணின் விந்துச்சக்தியிலே பரம்பரை என்ற வார்த்தையில் நிலைபெற்றுள்ளது. அதனால் இதை சரிசெய்ய புறப்படும்பொழுது மிகவும் கவனத்தோடு செயல்பட வேண்டும். திடீர் புரட்சி செய்துவிட முடியாது.

❖❖❖

பின்பு யார் தான் இந்த எண்ணத்தை முழுமையாக அழிப்பார்கள். நிச்சயமாக சொன்னால் மதங்களுக்கும் மதத்தலைவர்களுமே உலகில் இதை வெளியேற்ற முடியும். அந்த உணர்விற்கே விடை கொடுக்க முடியும். வேறு அரசியல் சமுதாயத் தலைவர்களால் முடியாது.



❖❖❖

மேற்சொன்னது தான் சரியான விடை என்றால் ஏன் இதுவரையில் இந்திய உட்கண்டத்தில் செயல்படுத்தப்பட முடிய வில்லை. காரணம் இதுதான். மதத்தலைவர்களை தவிர நாட்டிலுள்ள மற்ற எல்லாத்துறைகளிலும் உள்ள உள்நோக்கமில்லாமல் செயல்பட முடியாத பிறதுறை தலைவர்களெல்லாம் அவர்கள் இதற்கு செயல் படுகிறார்களே ஒழிய சரியாக செயல்படுவதில்லை. குறிப்பாக மதத்தலைவர்களை இத்துறையில் நுழைந்து செயல்பட விடுவதே இல்லை. அவர்களை சமுதாயத்திலிருந்து தடுப்பதும் அவர்களே ஜாதிகளுக்கு காரணம் என்று பொய்ப்பிரச்சாரம் செய்வதும் மற்றவர் களின் நிலையாய் இருக்கின்றது. அதனால் நல்லவர்களான மதத் தலைவர்களின் தொண்டு இத்தன்மையைக் களைந்தெடுக்கப் பயன் படுவதில்லை. இதுதான் நாட்டிலுள்ள பெரிய பரிதாபம்.

❖❖❖

தாங்கள் இதற்கு தயாரா? அல்லது இன்று தயார் நிலையில் இருந்துகொண்டு இந்தத்துறையில் பிரவேசித்து செயல்படுகிறீர்களா? மறைமுகமாக 'ஆம்' என்றே சொல்ல வேண்டும். என்னுடைய

சிறப்பான வழிகளில் இதுவும் ஒன்று. இன்னும் பற்பல வழிகளில் நானும் முயன்று மேன்மையான இந்தியாவை ஒளிரச் செய்ய பாடுகிறேன்.

❖❖❖

நீங்கள் நிச்சயமாக உங்களது வேலையில் வெற்றிக்கனியைப் பலனாக பெறுவீர்களா? சொல்ல முடியாது. நான் பெற்றாலும் பெறுவேன். பெறாமல் போனாலும் போவேன். இதற்கெல்லாம் நான் வருத்தப்படுவதே கிடையாது. வித்திட்டு மரம் வளர்க்க ஆரம் பிக்கும்பொழுதே பழத்திற்கு எவனாவது அழுவானா? நான் ஒரு நல்லு ணர்வோடு எனது ஆன்மாவையே இதற்கு ஆட்படுத்திக் கொண்ட ஒரு நல்ல தொழிலாளியாக எல்லாக் காலங்களிலும் விளங்கிக் கொண்டிருக்கிறேன். இதனால் எனக்கு அதிர்ச்சி, இடிபாடு, துக்கம் எதுவுமே கிடையாது. மனதிற்கு தொந்தரவு கொடுத்து கொள்ளுவது என்பதும் என்னை விட்டுப் போய்விட்டது.

❖❖❖

உங்களுடைய பிறப்பையும் நீங்கள் யார் என்றால் உங்களையும் நீங்கள் பிறர் உங்களை கேட்கும் கேள்விகளுக்கு என்ன சொல்லி பதில் அளிப்பீர்கள் எப்படி பதில் அளிப்பீர்கள்? எளியவன் என்னை எடுத்துச் சொல்லிக் கொள்ளும்பொழுது இந்த உடம்பில் எளிய பிறவியைக் கொண்ட நான் என்னை எடுத்துக்கொண்ட தொழிலுக்கு ஆட்படுத்திக் கொண்ட மனிதன் என்று அறிமுகம் செய்து கொள்ளும்போது ஒரு சிந்தனையாளன் என்றும் ஒரு இந்தியன் என்றும் சொல்லிக் கொள்ளுவேன்.

❖❖❖

எப்பொழுதும் ஒரு மனிதனுடைய சொந்த வாழ்க்கையின் அறிமுகத்தை அவனிடமே கேட்காதீர்கள். ஏனெனில் அது வேகமாக ஓடி மறைகின்ற ஒரு சினிமாப்படச்சுருளைப் போன்றது. ஒருவரைப் பற்றிய சிறப்பு மிக்க கடந்தகால நிகழ்கால செயல்களையே நினைவில் வைத்துக்

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
நடராஜன்
செல்: 9444228203
•••
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

# இறந்தபின்பும் சீனாவிடமிருந்து இந்தியாவை பாதுகாத்த பாபா




பாபா ஹர்பஜன் சிங் ஒரு சீக்கிய குடும்பத்தில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் நாள் அன்று சத்ரானா கிராமத்தில் பிறந்தார் (தற்போதைய பாகிஸ்தானில்). பின்னர் மார்ச் 1965–இல் பஞ்சாப் மாநிலத்தின் பட்டி நகரில் உள்ள தயானந்த் ஆங்கிலோ வேத கல்லூரி நிர்வாகக் குழுவின் உயர்நிலைப் பள்ளியில் தனது உயர் கல்வி படிப்பை படித்தார். இவர் அமிர்தசரஸ் நகரில் இருந்து ஒரு இராணுவ வீரராக இந்தியப் பஞ்சாப் படைப்பிரிவில் சேர்ந்தார்.




1968 ஆம் ஆண்டில் இவர் கிழக்குசிக்கிம் பகுதியில்உள்ள நாதூ லா கணவாய் என்ற இடத்தில் இந்திய–சீன போர் நடைபெற்ற சமயத்தில், பனிப் பிரதேசத்தில் கழுதைகளின் மூலம் இராணுவத்திற்கு பொருட்களை எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

ஆக்ரோஷமான பனிப்பொழிவின்போது ஏற்பட்ட பனிமலைச் சரிவில் சிக்கினார், கடும் பனிப்பொழிவு காரணமாக, பாபா ஹர்பஜன் சிங் இராணுவத்தொடர்பிலிருந்து விலகியது யாருக்கும் தெரியவில்லை, பின்பு சுதாரித்துக் கொண்ட இராணுவ தலைமை பாபா ஹர்பஜன் சிங்கை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து மூன்று நாட்கள் தேடியும் கண்டுபிடிக்க முடியாததால், அவரது குடும்பத்திற்கு ஹர்பஜன் சிங் குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் அவரைத் தேடும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அந்த சமயத்தில், சக இராணுவ வீரர் கணவில் ஹர்பஜன் சிங் தோன்றி தனது உடல்




பனியில் புதைந்திருந்த இடம் குறித்த தகவல் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

மூன்று நாள் தேடலுக்குப் பிறகு அவரது அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் அவரது உடல் முழு இராணுவ மரியாதைகளுடன் தகனம் செய்யப்பட்டது.

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தோசீனா போருக்கு பின்னர் இந்திய இராணுவம், மற்றும் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்திற்கும் இடையே நடைபெற்ற ஒரு சண்டையில் 14,500 அடிகள் (4,400m) உயரத்தில் உள்ள திபெத் மற்றும் சிக்கிம் இடையே உள்ள நாதூ லா கணவாய் பகுதியில் பாபா ஹர்பஜன் சிங்கின் இறந்தார் என இந்திய இராணுவத்தால் அறிவிக்கப்பட்டது.

ஒருசில நாட்களில் ஹர்பஜன் சிங் பற்றிய நினைவை மறந்து இராணுவ வீரர்கள் தங்கள் பணிகளில் ஈடுபடத் துவங்கினர். அந்த சமயத்தில் ஹர்பஜன் சிங் தங்கியிருந்த அறையில் இருந்த அவரின் உடைகள் மிகுந்த சுத்தமாகவும், அவர் அணிந்த ஷூக்களில் பனித்துளிகளின் சிதறல் களும் இருந்ததை சக வீரர்கள் பார்த்துள்ளனர். இந்த நிகழ்வு நாளுக்கு நாள் தொடர்ந்துள்ளது. இந்த தகவலை சக வீரர்கள் இராணுவத் தலைமைக்கும் தெரிவித்துள்ளனர்.

இந்த சமயத்தில் இராணுவத்தில் தான் பணி புரிந்த படைப்பிரிவில் சக வீரர்கள் பணியில் அலட்சியமாக ஈடுபட்டாலோ, பணியின் போது உறங்கினாலோ, அவர்களின் முதுகில் யாரோ அறைவது போன்று உணர்ந்துள்ளனர்.

அதே சமயத்தில் ஹர்பஜன் சிங் தங்கியிருந்த அறையில் இருந்த அவரது உடைகள், பனியில் சென்று வந்தால் எப்படி இருக்குமோ அதுபோன்று இருப்பதையும் வீரர்கள் கவனித்துள்ளனர்.

ஒரு கட்டத்தில் ஹர்பஜன் சிங் குறித்த தகவல் வதந்தியாக பரவியது, ஹர்பஜன் சிங் அறையை யாரும் சுத்தப்படுத்தாதபோதும்,

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்




அவரது அறை மிகவும் சுத்தமாக இருந்ததை இராணுவ அதிகாரிகள் கவனித்துள்ளனர், இந்த சமயத்தில் சீன இராணுவத்திலிருந்து, இந்திய இராணுவத்திற்கு ஒரு செய்தி கிடைத்தது.

குறிப்பிட்ட எல்லையில் முகம் தெரியாத ஒரு வீரன் வெள்ளைக் குதிரையில் காவல் காப்பதாகவும், ஒருசில சமயங்களில் வெள்ளைக் குதிரை மட்டுமே அங்கு உலாவுவதாகவும், அந்த வீரர் இந்தியப் படையைச் சேர்ந்தவரா என்பதை தெரிவிக்குமாறு, சீன இராணுவம் தகவல் அனுப்பியது.

இதுகுறித்து ஆராய்ந்த இந்திய இராணுவம், சீனா குறிப்பிட்ட பகுதி மிகுந்த பனிப்பொழிவு நிறைந்த பகுதி, இந்த இடத்தில் இந்திய இராணுவத்தினர் யாரும் பணியில் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்தியது, அதே சமயம் ஹர்பஜன் சிங் உடை கடும் பனியில் காவல்புரிந்த வீரரின் உடையைப் போன்று பனித்துளிகள் படர்ந்திருப்பதை பார்த்து ஆச்சரியம் அடைந்தனர்.

இது ஏதோ அமானுஷ்ய சக்தி என்பதை மட்டும் உணர்ந்த இராணுவம் ஹர்பஜன் சிங் தங்கியிருந்த அறைக்கு அதிக முக்கியத்துவம் தரத்துவங்கியது, அந்த அறையை சுத்தமாக வைத்திருக்க ஒரு பணியாள் நியமிக்கப்பட்டார்.

மெல்ல ஹர்பஜன் சிங் ஆன்மா இந்திய இராணுவத்துடன் இன்னும் பணி புரிவதாக சக வீரர்கள் நம்பினர்.

இதை மெய்ப்பிக்கும் வகையில், இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே போர் ஏற்பட்டால் ஹர்பஜன் சிங் பாபா அவர்களின் ஆன்மா, இந்திய இராணுவ வீரர்களுக்கு குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னதாக வரவிருக்கும் தாக்குதல் குறித்து எச்சரிக்கை செய்தது.

பாபாவின் எச்சரிக்கை கிடைக்கும்போதெல்லாம் இந்திய இராணுவம் மிகுந்த விழிப்புடன் செயல்பட்டு சீன ஊடுருவல்களை தடுக்கும். இதுபோன்று பலமுறை நடைபெற்றதால், ஹர்பஜன் சிங் பாபாவிற்கு இந்திய இராணுவத்தில் மட்டுமின்றி சீன இராணுவத்திலும் தனி மரியாதை ஏற்பட்டது.

நாதூ லாவில் இந்திய சீன நாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தை கூட்டங்கள் நடைபெறும்போதெல்லாம் ஹர்பஜன் சிங் பாபாவும் அதில் பங்கேற்பதற்காக ஒரு தனி நாற்காலியை ஒதுக்கி வைத்தனர். அந்த நாற்காலி காலியாக இருக்கும், அதில் ஹர்பஜன் சிங் பாபா அமர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாக இரண்டு இராணுவத்தினரும் நம்பினர்.

இதேப்போன்று இராணுவ வீரர்கள்









விடுமுறையில் தங்களது வீட்டிற்கு செல்வது வழக்கம், ஹர்பஜன் சிங் பாபாவுக்கும் விடுமுறை வழங்கும் நடவடிக்கை கையாளப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி, அவரது தனிப்பட்ட பொருட்கள், புது ஜல்பாய்குரி இரயில் நிலையத்திலிருந்து புறப் படுகிறது.

பின்னர் அங்கிருந்து அவரது உடைமைகளை இந்திய மாநிலமான பஞ்சாப் மாநிலத்தின் கபூர் தலா மாவட்டத்தில் உள்ள குகா கிராமத்திற்கு ரயிலில் அனுப்பப்படுகிறது.

இந்திய இரயில்வேயின் எந்தவொரு ரயிலிலும் வெற்று படுக்கை வசதியில் பாபாவுக்கு ஒரு சிறப்பு முன்பதிவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அவரது சொந்த ஊருக்கு பயணம் செய்ய ஒரு இருக்கை காலியாக விடப்படுகிறது, மேலும் மூன்று வீரர்கள் பாபாவின் உடைமைகளுடன் அவரது வீட்டிற்கு செல்கிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் நாதூ லாவில் இருந்து இராணுவ வீரர்களால் ஒரு சிறிய தொகை அவரது தாய்க்கு அனுப்பப்படுகிறது. மேலும் அவரது கிராமம் அவரை இன்னும் தெய்வமாகவே போற்றி வழிபடுகின்றனர்.

இவரது சமாதி chhokya chho என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது 4000 மீட்டர் உயரத்தில் உள்ளது. இந்தப் பகுதிதான், பாபா பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பகுதி. இந்த இடத்தில் ஹர்பஜன் சிங் பாபாவுக்கு கோவில் கட்டப்பட்டது, பனி நிறைந்த பகுதியானதால், இங்கு சென்று வர மிகுந்த சிரங்களை சந்திக்கவேண்டியிருந்தது.

இதனால், அந்த இடத்திலிருந்து 9 கிலோ மீட்டர் தூரத்தில் புதிய பாபா கோவில் 1982ம் ஆண்டு கட்டப்பட்டது. பாபா ஹர்பஜன் சிங் இறந்த பிறகு, இந்திய தேசிய இராணுவம் இவருக்கு கேப்டன் பதவி வழங்கியது.

இவரது கோவிலில் நோட்டு புத்தகம், பேனா போன்றவற்றை வைத்து வழிபட்டு அதை எடுத்துச் சென்று தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்து பள்ளியில் சேர்த்தால் அவர்கள் நன்றாக படிக்கின்றனர் என்று இங்கு உள்ள இராணுவ வீரர்கள் கூறுகின்றனர்.

சீன நாட்டு இராணுவ வீரர்களும் இவரை பூசை செய்கின்றனர். இரு நாட்டினரும் Flag day அன்று ஒன்று சேர்ந்து இவருக்கு பூசை செய்கின்றனர்.

இவர் வெள்ளைக் குதிரையின் மீது இந்திய எல்லைப் பகுதியில் வருவதை நாங்கள் நேரில் கண்டதுண்டு என்று சீன நாட்டு இராணுவவீரர்களும் கூறுகின்றனர். இறந்த பிறகும் தனது நாட்டுப்பற்று உணர்வின் மூலம் தனது நாட்டுப்பற்றை வெளிப்படுத்தி வருகிறார் ஹர்பஜன் சிங் பாபா.

www.aanmeegamalar.com

# யானையிடம் ஆசீர்வாதம் வாங்கினால் லட்சுமி கடாட்சம் பெறுகும்




மூலிகை தாவரங்களை மட்டும் உண்டு மிருகங்களில் பலமுள்ளதாக திகழும் உயிரினம் யானை! மகத்தான தெய்வீக அம்சங்கள் பொருந்தியது.

உலகில் வாழும் உயிரினங்களில் இரண்டு நாசித் துவாரங்கள் வழியாகவும் ஒரே நேரத்தில் சுவாசிக்கும் தன்மை யானைக்கு மட்டுமே உண்டு.

மனிதர்களாகிய நமக்கு கூட தினமும் 24 நிமிடங்களுக்கு ஒருமுறை நம்முடைய சுவாசமும் ஒரு நாசித் துவாரத்திலிருந்து இன்னொரு நாசி துவாரத்தில் மாறிக் கொண்டே இருக்கும்.

சுவாசத்தை கட்டுப்படுத்தும் மற்றும் முறைப்படுத்தும் ஆன்மீக முயற்சிகளுக்கு சரகலை என்று பெயர்.

பிராணயாமம், வாசியோகம் போன்ற வைகளும் நமது சுவாசத்தை தெய்வீகத் தன்மைக்கு முன்னேற்றம் அடைய வைக் கும் ஆன்மீக பயிற்சி முறைகளாகும்.

வாசியோகம் அல்லது பிராணாயாமத்தில் குறிப்பிட்ட நிலையை எட்டியவர்கள் எப் போதும் இரண்டு நாசித் துவாரங்கள் வழியாகவும் சுவாசிக்கும் திறமையை பெற்றுவிடுவார்கள். இதற்கு சுழுமுனை வாசி யோகம் என்று பெயர்.

இயற்கையாகவே சுழுமுனை வாசியோகம் உள்ள யானை அதன் தும்பிக்கையை நம் தலையில் வைத்து ஆசீர்வாதம் செய்வதால் நமக்கு மகாலட்சுமியின் ஆசிர்வாதம் கிடைக்கிறது என்பதுதான் இதன் பின்னணி யில் உள்ள தெய்வீக ரகசியம்.



# பக்தியின் உச்சம்




பக்தி என்றால் மாணிக்க வாசகர் போல் இருக்க வேண்டும். மாணிக்கவாசக பெரு மானிடம் ஈசனே என்ன வரம் வேண்டும் கேள் என்கிறார். அதற்கு மாணிக்கவாசக பெருமான் என்ன கேட்கிறார் பாருங்கள்.

வேண்டதக்கது அறியோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அறியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றே!

❖ ❖ ❖

எனக்கு என்ன தர வேண்டும்
என்று உனக்குத் தெரியும்.
எனக்கு எவ்வளவு தர வேண்டும்
என்றும் உனக்குத் தெரியும்.

எனக்கு ஏதாவது வேண்டும் என்று நான் நினைத்தால், அதுவும் உன் விருப்பமே_ என்று மணிவாசகர் ஈசனிடம் உருகி பாடுகிறார்.

ஆனாலும் சிவ பெருமான் மாணிக்க வாசக பெருமானை விடுவதாக இல்லை மீண்டும் கேட்கிறார் உனக்கு என்ன வேண் டும் கேள் என்று மீண்டும் மாணிக்கவாசகர் பாடுகிறார்..

உற்றாரை யான் வேண்டேன்
ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா
உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போல
கசிந்து, உருக வேண்டுவனே!

சொந்தங்கள் எனக்கு வேண்டாம், ஊர் வேண்டாம், நல்ல பெயர் வேண்டாம், நல்ல படிப்பு அறிவு வேண்டாம் உன் அருள் இருந்தால் அது தானாக கிடைக்கும். குற்றாலத்தில் அமர்ந்து இருக்கும் ஆனந்த கூத்தனே நான் உன் திரு வடிகளை தேடி தாயை கண்ட கன்று போல அன்பில் உருக வேண்டும். பக்தனைப் போல, ஒரு கன்றை ஈன்ற பசுவின் மனம் போல உருக வேண்டுவனே என்கிறார்..!

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்














# மூன்றாம் உலகப்போரா?

2007–ஆம் ஆண்டிலிருந்து 2016–ஆம்ஆண்டு வரை வேகமாக முன்னோக்கி பார்த்தோமானால், நாம் மீண்டும் மீண்டும் பேரழிவுகரமான நிகழ்வுகளை எதிர்கொள்ளும் உலகில் வாழ்கிறோம் என்பதை அறிவோம்.

2016 ஆம் ஆண்டில் உலகளாவிய அளவில் அதிகரித்த இயற்கை பேரழிவுகள், அதி வெப்பமான காலநிலை மாற்றம், சிரியாவில் நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டு போர், பயங்கரவாத அமைப்புகளால் உருவாக்கப்பட்ட பரவலான அழிவு/ குண்டுவெடிப்பு, புலம்பெயர்ந்தோர் நெருக்கடி, உலக வல்லரசுகள் அணு ஆயுதங்களை கையகப்படுத்துதல் மற்றும் பயன்படுத்துதல், சர்வதேச அங்கீகாரத்தை எதிர்நோக்கும் பிற அரசாங்கங்கள் போன்ற நிகழ்வுகளால் நிலைமை மோசமாக உள்ளது. நாஸ்ட்ரடாமஸ் எனும் பிரான்ஸ் நாட்டின் தீர்க்கதரிசி, மூன்றாம் உலகப் போர் நிகழும் என கணித்துள்ளார். மேலும் பல ஆதாரங்கள் நாஸ்ட்ரடாமஸின் கணிப்புகளை விளக்கியுள்ளன.

குழந்தைகளின் விளையாட்டு போல் தோன்றும் முதல் இரண்டு உலகப் போர்களை காட்டிலும், மூன்றாம் உலகப் போர் பிரம்மாண்டமான அளவில் துன்பகரமான பேரழிவுகள் எதிர்கொள்ளும் என்று கணித்துள்ளனர். ஆன்மீக ஆராய்ச்சி மற்றும்பல மகான்களின் வழிகாட்டுதல் மூலம், மூன்றாம் உலகப் போர் உடனடியாக நிகழும் என்பதையும், அதன் தாக்கம் எங்கும் இருக்கும் என்பதையும் கண்டறிந்துள்ளோம். சில பயங்கரமான நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்வதால், மக்கள் உலகப் போர் நடக்கும் என்றே எதிர்பார்க்கிறார்கள்.

'மூன்றாம் உலகப் போர் என்பது பெரும்பாலானோர் தற்போது கூகிளில் தேடும் ஒரு முக்கிய சொற்றொடராக உள்ளது. இந்த தேடல் அதிகரித்துக் கொண்டே இருக்கிறதே தவிர, குறைவதற்கான அறிகுறிகளே இல்லை. மூன்றாம் உலகப் போரின் சாத்தியத்தை உலகெங்கிலும் உள்ள மக்கள் எதிர்பார்க்க தொடங்கியுள்ளதையே இது குறிக்கிறது.

ஆச்சரியம் என்னவென்றால் பெரும்பாலான மக்கள் மூன்றாம் உலக போரிலிருந்து எவ்வாறு மீள்வது அல்லது அணுசக்தி வீச்சு தொடர்பான சொற்களை தேடவில்லை.

வளர்ந்த நாடுகளில் உள்ள நமக்கு, இந்த நெருக்கடி சில தொலைதூர மத்திய கிழக்கு நாடுகளில் அல்லது ஆபிரிக்கா கண்டத்தில் தான் உள்ளது என்பதே கருத்தாகும். எவ்வாறாயினும், ஐரோப்பாவில் இப்போது தொடங்கி இருப்பதை போன்ற ஒரு காலம், நாம் எங்கிருந்தாலும் விரைவில் நம் தெருக்களையும், நம் வீட்டு வாசலையும் எட்டும். அப்பொழுது, மிகவும் தாமதமாகவே இருந்தாலும், மக்கள் உயிர்வாழும் உத்திகளை தேடுவார்கள். அத்தகைய அளவில் நடக்கும் எந்தவொரு யுத்தம் / கிளர்ச்சி இணையற்ற எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் மற்றும் சேதங்களை உருவாக்கும்.

## மூன்றாவது உலகப் போரின் பின்விளைவுகள்

ஆன்மீக ஆராய்ச்சி மூலம், இந்த கால கட்டத்தின் பின் விளைவுகள் பற்றிய சில உண்மைகளையும், இது எவ்வாறு நாம் எதிர் கொள்ள வேண்டிய பேரழிவின் அளவைக் காட்டுகிறது என்பதையும் நாங்கள் கண்டறிந்துள்ளோம். பின்வருபவை நாம் அனைவரும் விரைவில் எதிர்கொள்ள வேண்டிய உலகத்தின் நிலையாகும்.

- முதலாவதாக, 2019–2023 க்கு இடையிலான ஆண்டுகளில் நிகழ்வுகள் மிக வேகமாக சீர்குலைய ஆரம்பிக்கும்.
- உலக மக்கள்தொகையில் 1/3 (அதாவது இருநூறு கோடிக்கும் அதிகமான மக்கள்) அணு ஆயுத பேரிடர்களால் மாண்டு விடுவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கதிரியக்க மாசுபாடு, அணுசக்தி வீச்சு மற்றும் பிற காரணங்களால் பத்து இலட்சத்திற்கு

அதிகமானவர்கள் மாண்டு விடுவார்கள். மொத்தத்தில், பாதிக்கும் மேலான உலக மக்கள்தொகை போரின் மூலம் நேரடியாகவோ அல்லது இயற்கை பேரழிவுகள் மற்றும் அதன் பின்விளைவு காரணமாக அழிய நேரிடும்.

❖ அவசர சேவைகள் மற்றும் அரசாங்க உதவி அறவே இல்லாத நிலை அல்லது பேரழிவு மற்றும் அழிவின் சீற்றத்தை சமாளிக்க இய லாத நிலை இருக்கும்.

❖ உலகின் 70% அடிப்படை வசதிகள் அழிக் கப்படும். உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான நகரங்கள் முற்றிலுமாக அழிக்கப்படும்.

❖ மருத்துவப் பொருட்களுக்கு பெரும் பற்றாக் குறை ஏற்படும். அதோடு மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளை அணுகுவதற்குண்டான வாய்ப்பு குறைவாகவே இருக்கும்.

❖ கதிரியக்க வீச்சினால் மக்கள், விலங்குகள், மீன் மற்றும் நிலம் மாசு அடையும்.

❖ கதிரியக்க வீச்சின் விளைவாக, நீர்நிலைகள் அடுத்த வரும் 12 மாதங்களுக்கு மாசடைந்தே இருக்கும். சுத்தமான குடிநீர்க்கு பற்றாக்குறை ஏற்படும், மேலும் நீரினால் பரவும் நோய்கள், பெருவாரியாக பரவும் தொற்று நோய்களை ஏற்படுத்தும்.

❖ 10 ஆண்டு காலத்திற்கு உணவு பற்றாக்குறை நீடிக்கும். *

❖ 10 ஆண்டுகளுக்கு கடுமையான பெட்ரோல் பற்றாக்குறை இருக்கும். இதனால் அனைத்து வகையான மோட்டார் வாகன போக்குவரத்து, மோசமாக பாதிக்கப்படும்.

❖ 10 ஆண்டுகளுக்கு கடுமையான மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படும்.

❖ மக்கள் மனச்சோர்வு, பதட்டம் மற்றும்துக்கம் போன்ற பல்வேறு மன நோய்களால் பாதிக்கப் படுவார்கள்.

❖ சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக சீர்குலைந்து, எல்லா இடையூறுகளுக்கும் எதிராக உயிர் வாழ வேண்டிய அவசியம், மக்களின் மோசமான நடத்தையை வெளிகொணரும். கொள்ளையடிப்பது, குற்றம் செய்வது மற்றும் பிழைப்புக்காக போராடுவது என்பது தவறாமல் நித்தமும் நிகழும். இதுபோன்ற நெருக்கடி காலங்களில், மக்களின் உண்மையான நடத் தை, அது நல்லதோ அல்லது கெட்டதோ வெளிப்படும்.

❖ இந்த யுத்தத்தின் தாக்கம் 30 ஆண்டுகள் வரை நீடிக்கும். இதிலிருந்து மறுகட்டமைப்பு செய்து மீண்டு வர சுமார் 100 ஆண்டுகள்ஆகும்

❖ இந்த காலம் ஒப்பீட்டளவில் குறுகியதாக இருப்பதேனென்றால், அந்த நேரத்தில் உலக மக்கள்தொகையில் பாதி மட்டுமே பல்வேறு வசதிகளை வழங்குவதற்கும் உண வளிப்பதற்கும் எஞ்சியிருக்கும்.

## மூன்றாம் உலகப் போரிலிருந்து தப்பியவர்களுக்கு அதன் அர்த்தம் என்ன?

இது வரவிற்கும் சூழல் மற்றும் நிலைமை எப்படி இருக்கும் என்பதற்கான ஒரு பார்வை ஆகும். அத்தகைய சூழ்நிலையில் உங்களையும் உங்கள் அன்புக்குரியவர்களையும் கற்பனை செய்து பாருங்கள். பொதுவாக, இதுபோன்ற பயங்கர மான மற்றும் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் அனைவரின் மனதிலும் உள்ள எண்ணங்கள், ‘என் அன்புக்குரியவர்களும் நானும் எப்படி உயிர்வாழ முடியும்?’ மற்றும் ‘எவ்வாறு என்னையும் எனது அன்புக்குரியவர்களையும் பாதுகாப்பேன்?’ என்பவையாகவே இருக்கும். உதவிக்கு அரசாங்கத்தையோ அல்லது நிவாரண சேவை அளிப்பவர்களையோ எதிர்பார்க்காமல், அனைவரும் தன்னை தானே பார்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையே இருக்கும்.

உலகம் ஒரு முக்கியமான மாற்றத்திற்கு உட்படும். மூன்றாம் உலகப் போரிலிருந்து தப்பிய வர்கள் ஒரு எதிர்மறையான மற்றும் குழப்பமான சூழலின் நடுவில் மனிததன்மை மற்றும் சகிப்புத்தன்மையின் வரம்புகளை சோதிக்கும் சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை யில் இருப்பார்கள். “தன் கையே தனக்குஉதவி” என்பதற்கேற்ப மூன்றாம் உலக போரில் தப்பியவர் களுக்கு, உண்மையில் உதவப்போவது அவர்கள் தன்னம்பிக்கைஅடைவதுதான்; அதாவது, சரிந்து வரும் சமூக அமைப்புகளைச் சார்ந்து இராமல் உயிர்வாழ்வதற்கான கருவிகளைக் கற்றல்.

போதுமான பொருட்களை சேமித்து வைப்பது என்பதை போன்ற அடிப்படை விஷயங்களும், பல் வேறு நெருக்கடிகளை கையாள்வதற்கான உடல் வலிமை மற்றும் மனத்திறன் ஆகியவற்றைக் கொண்டிருத்தல், மற்றும் கதிரியக்க வீச்சிலிருந்து உண்டாகும் மாசுபாட்டை எவ்வாறு கையாள்வது என்பதை போன்ற பெரிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் ஆகியவை நம்மை நல்ல நிலையில் வைத்திருக்கும். இத்தகைய காலங்களில் உயிர் வாழ்வதற்கான கருவிகள் மற்றும் அவற்றை பற்றிய அறிவு, உயிர் வாழ்வதற்க்கும் இறப்புக்கும்


மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


உள்ள இடைவெளியை அதிகப்படுத்தி பேரழிவை சந்திப்பதிலான உங்களின் தயார்நிலையைஅதிகப் படுத்தும்.

## மூன்றாம் உலகப் போரில் உயிர்பிழைத்து வாழ்வதற்கும் பேரிடர் மேலாண்மைக்குமான கையேடு

இந்த காரணத்தினாலேயே, இந்த பகுதியில் வரவிருக்கும் காலங்களில் தன்னை தயார் படுத்திக் கொள்ளவும், தற்காத்துக் கொள்ளவும், உயிர்பிழைத்து வாழ்வதற்கு உடல், உளவியல் மற்றும் ஆன்மீக நிலையில் உதவும் உயிர்வாழும் கருவிகள் மற்றும் பயிற்சிகளை உங்கள் உதவிக்காக பகிர்ந்து கொள்கிறோம்.

கீழே உள்ள ஒவ்வொரு படக்காட்சி பக்கங்களோடும் அதன் அம்சத்தை விரிவாக விளக்கும் பகுதி இணைக்கப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில், கீழேயுள்ள அட்டவணையில் உள்ள தலைப்புகளை அதன் துணைப்பிரிவுகளுடன் தொடர்ந்து இணைப்போம். எனவே மூன்றாம் உலகப் போரிலிருந்து உயிர் பிழைத்து வாழ, பேரிடர் ஆயத்த நிலை பற்றியும் அவசரகால அத்தியாவசியங்கள் குறித்த உங்கள் அறிவை புதுப்பித்துக் கொள்ளவும் மீண்டும் மீண்டும் இந்த கட்டுரையை பார்க்கவும்.

## மூன்றாம் உலக போரிலிருந்து உயிர்பிழைத்து வாழ்வதற்கு உடல், உளவியல் மற்றும் ஆன்மீக நிலையில் எடுக்க வேண்டிய படிகளின் முக்கியத்துவத்தை அதிகரித்தல்

பேரிடர் ஆயத்த நிலை என்று வரும்போது, நம்மில் பெரும்பாலோர் ஸ்தூலமான செயல்களில் மட்டுமே கவனம் செலுத்துகிறோம். இருப்பினும் ஆன்மீக ஆராய்ச்சி / ஆன்மீகக் கோட்பாடுகளின் படி, சூட்சும நிலையில் எடுக்கும் முயற்சிகள் ஸ்தூலமான முயற்சிகளை விட பல மடங்கு பயனுள்ளதாக இருக்கும். அதுவும் பேரிடர் ஆயத்த நிலை என்று வரும்போது இது மிகவும் முக்கியமாகும்.

❖ ஸ்தூலமான நடவடிக்கைகள் (மாற்று சிகிச்சை வகைகள், முதலுதவி நுட்பங்கள் பற்றிய அடிப்படை அறிவை கொண்டிருத்தல், தீயணைப்பு நுட்பங்கள் போன்றவை) ஸ்தூல நிலையில் மட்டுமே உள்ளன.

❖ ஸ்தூலமான நடவடிக்கைகளுடன் ஒப்பிடும் போது உளவியல் நடவடிக்கைகள் (மனோவசிய சிகிச்சை முறை போன்றவை) சூட்சுமமானவை.

❖ ஆன்மீக நடவடிக்கைகள் (நாமஜபம் செய்வது, மந்திரங்களை ஓதுவது, அக்னிஹோத்ரம் போன்ற ஆன்மீக சடங்குகளை செய்வது மற்றும் சீரான ஆன்மீக பயிற்சி மேற்கொள்வது போன்றவை அதி சூட்சுமமானவை).

சூட்சும நிலை, ஸ்தூலமான நிலையை விட பல மடங்கு பயனுள்ளதாக இருக்கும். இதன் சாராம்சம் என்னவென்றால், வரவிருக் கும் காலங்களை எதிர்கொள்வதற்கும், உயிர்பிழைத்து வாழ்வதற்கும், ஸ்தூலமான நடவடிக்கைகளை மட்டும் பயன்படுத்தினால் போதாது. விச்வகோட் பாடின் படி செய்யப்படும் தீவிரமான ஆன்மீக பயிற்சி கடவுளின் அருளை ஈர்த்து, ஸ்தூலமான பாதுகாப்பை விட பல மடங்கு பாதுகாப்பை அளிக்கிறது.

பராத்பர குரு டாக்டர் ஆடவலே போன்ற மிக உயர்நிலை மகான்கள், அவர்களது தெய்வீக தொலை நோக்கு பார்வையால், குழப்பமான இந்த காலகட்டத்தில், ஆன்மீக நிவாரண முறைகள் மூலம் மனிதகுலத்தை வழி நடத்துவது, அடுத்தடுத்த நிகழும் பேரழிவு காலங்களில் மக்களின் உயிர்காக்கும் என்பது திண்ணம். நாமஜபங்கள், நிவாரண தீர்வுகள் மற்றும் ஆன்மீக பயிற்சியை உடனடியாக தொடங்குமாறு வாசகர்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் மூன்றாம் உலகப் போரிலிருந்து உயிர் பிழைத்து வாழ்வதற்கும், உடல் மனம் மற்றும் ஆன்மீக ரீதியாக சிறப்பான தயார் நிலையில் எதிர்கொள்வதற்கும் முறையான ஆன்மீக பயிற்சியை தொடங்குவது அல்லது தொடர்வது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது.

(மேலும் விவரங்கலுக்கு
www.sanatan.org
தொடர்பு: 9380949626
















# ஆன்மிக உலகின்

# முதல் இலவச

# இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com

aanmeegamalr (app)–ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**

# ஆன்மீக வழியில் அமைதி

உலகில் அழியாத பொருட்கள் இருக்கின்றன. ஆனால் நமக்கு உலகில் அழியாத பொருட்கள் இருப்பது பற்றி வெளிப்படையாக தெரிவதில்லை. நமக்கு அழியாத பொருட்கள் பற்றி தெரியாத காரணத்தால்தான் நாம் அழியாத பொருட்களின் மீது ஆசையோ விருப்பமோ கொள்வதில்லை. அழியாத பொருள் ஒன்று இருப்பதாகத் தெரிந்தால் அதன் மீது நாம் அளவு கடந்த ஆசை வைத்து அதனை அடைவதற்கு அல்லும்பகலும் முயற்சி செய்து கொண்டிருப்போம்.

உலகில் அழியக்கூடிய பொருட்கள் அனைத்தும் அநித்தியம். ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்த்தால் அநித்தியம் என்பது காரியம், நித்தியம் என்பது காரணம் ஆகும். காரணம் என்பது நித்தியம் என்றும் காரியம் என்பது அநித்தியம் ஆகும். காரணம் என்றால் எந்தப்பொருள் எப்படி எந்தத் தன்மையில் இருக்குமோ அது மாற்றம் இல்லாமல் அப்படியே இருக்கும். காரியம் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது காரணம் அப்படியே இருக்கும். காரியம் என்றால் உலகில் காணும் அநித்தியப்பொருட்கள் அவ்வப்போது மாறும், இல்லையெனில் சிறிது காலத்தில் அவை அழிந்து விடும். உலகில் காணும் பொருட்கள் அனைத்தும் நிரந்தரமாக இருப்பதில்லை. இதனையெல்லாம் அனுபவத்தில் நாம் இவ்வுலகில் கண்ணால் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். களிமண் காரணம் என்றால், களிமண்ணால் செய்யப்பட்ட மண்பானைகள் காரியம் ஆகும். காரியம் என்று கருதப்படும் மண்பானைகள் சுலபமாக அழிந்து விடும். ஆனால் அந்த பானைகள் உருவாவதற்கு காரணம் என்று கருதப்படும் களிமண் அதே தன்மையில்தான் மாறாமல் இருக்கும் அது அழிவதில்லை. இந்த உலகத்தில் உள்ள எந்தப் பொருட்களும் நித்தியமாக இருப்பதில்லை.

உலகில் அழியக்கூடிய பொருட்கள் அனைத்தும், அதனால் வரக்கூடிய இன்பங்கள் அனைத்தும் அநித்தியமானவை என்று உபநிஷத்தில் கூறப்படுகிறது. உலகில் அழியாமல் இருக்கும் பொருள் அந்தப்பொருளினால் வரக்கூடிய ஆனந்தம் நித்தியம் ஆகும். நித்தியமாக இருப்பது நம் கண்ணுக்குத் தெரியாததும் ஞானத்தினால் உணரக்கூடிய பரம்பொருள் ஒன்றாகும். இதனை ஒவ்வொருவரும் ஆன்மீக வழியில் நின்று ஞானத்தின் மூலம் பரம்பொருளை அறிந்து கொள்ள முடியும். ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்த்தால் சுருக்கமாகக் கூறினால் காரணம் என்பது நித்தியம், காரியம் என்பது அநித்தியம் ஆகும்.

உலகில் எந்தப்பொருள் காரணமோ அந்தப்பொருள் அழியாமல் அப்படியே இருக்கும். எடுத்துக்காட்டாக தங்கம் என்ற உலோகப்பொருள் காரணம் அதாவது நித்தியம் ஆகும். ஆனால் அதில் செய்யகூடிய காசுமாலை, நெக்லஸ் வளையல் போன்றவை காரியம் ஆகும். அதாவது அவை அநித்தியமானவை. பொன்நகைகள் உருத்தெரியாமல் சேதமடைந்து விட்டால் அதனை காசுமாலை நெக்லஸ் வளையல் என்று அழைப்பதில்லை. அதனை தங்கம் என்றுதான் அழைப்போம். ஆனால் மூலப்பொருள் தங்கம் என்ற உலோகத்தன்மை எப்போதும் மாறுவதில்லை அழிவதில்லை. இதைபோல்தான் உலகில் உள்ள அநித்திய பொருட்கள் அனைத்தும் காரியம் என்றும், நித்தியப்பொருட்கள் அனைத்தும் காரணம் என்றும் ஆன்மிகம் கூறுகிறது. எது காரணமாக இருக்கிறதோ அது அப்படியே இருக்கும். அதாவது தங்கம் என்ற உலோகப்பொருள் மாறாதது போன்று. ஆன்மீகத்தில் காரியம் அநித்தியம். காரியம் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது காரணம் அப்படியே நித்யமாக இருக்கும்.

காரியம் என்பது அநித்தியப்பொருட்கள் சிறிது காலத்தில் அழிந்து விடும். அதாவது தங்க நகைகள் போன்று அநித்தியப்பொருட்கள் உருத்தெரியாமல் அழிவதைப்போல். ஆன்மீகத்தில் காரணம் என்பது அழியாத நித்தியப் பொருட்கள். உலகில் காணப்படும் அழியும் பொருட்கள் அனைத்தும் காரியம். அதில் உள்ள காரணம் என்ற பொருள் கண்ணுக்குத்தெரியாத ஞானத்தினால் உணரக்கூடிய பரம்பொருள். எடுத்துக்காட்டாக மரம்

23

www.aanmeegamalar.com

என்பது காரணம் என்னும் நித்யப்பொருள். அதில் செய்யப்படும் மரமேஜை, மரநாற்காலி, மரப்பொம்மைகள் காரியம் என்னும் அழியக்கூடிய அநித்தியப் பொருள்கள் ஆகும். மேஜை, நாற்காலி, பொம்மைகள் போன்ற மரச்சாமான்கள் காரியம் என்பதால் அவை நாளடைவில் அழிந்து விடும். ஆனால் மேஜை, நாற்காலி, பொம்மைகள் போன்றவைகள் உருவாகக் காரணப்பொருளாக இருக்கும் மரத்தின் தன்மைகள் மாறுவதில்லை, எப்போதும் அழிவதில்லை. அணுவைப்போல் சிதைத்தாலும் மரத்தின் தன்மை மாறுவதில்லை. உலகத்தில் அழியக்கூடிய பொருட்களுக்கு அனைத்தும் அநித்தியம் அதில் நம் கண்ணுக்குத் தெரியாததும் ஆன்மீக வழியில் நின்று ஞானத்தினால் உணரக்கூடியதுமான காரண காரியத்தை கடந்து இருப்பது பரம்பொருள் மட்டும் நித்தியமாகும்.


www.aanmeegamalar.com

நாம் ஆராய்ந்து பார்த்தால் இந்த உலகத்தில் காணப்படும் பொருட்கள் அந்தப் பொருட்களினால் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி என்பது நிரந்தரமாக இருப்பதில்லை. அவைகள் அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கும் அல்லது அழிந்து கொண்டே இருக்கும். நம்முடைய கண்கள் நிலையான பொருள்களை இதுவரை உலகத்தில் பார்த்ததில்லை, அதாவது அப்பொருள்கள் மூலம் வரக்கூடிய இன்பமும் நிலையாக இருந்ததில்லை. நமது விவேக அறிவு கொண்டு அனுபவத்தின் மூலம் இதனை அறிந்து கொள்ளலாம். உலகில் காணப்படும் பொருட்கள் அநித்தியம் என்று நமது மனம் பக்குவநிலைக்கு வரும்போது, ஆசை போன்ற எண்ணங்கள் ஒருபோதும் வருவதில்லை. ஆசை போன்ற எண்ணங்கள் நமது உள்ளத்தில் இல்லாதபோது நாம் தேடும் விரும்பும் மன அமைதி தானாகவே வந்தடையும்.

உலகில் பிறந்த மனிதர்கள் அனைவருக்கும் எதனையும் ஓரளவுக்கு பிரித்து அறியும் அறிவு இருக்கிறது. இதனை அனுபவத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். நமது அனுபவத்தின் மூலம்தான் இந்த அறிவு வரவேண்டும் என்பதில்லை. சிந்தித்துப் பார்த்தால் சிலருக்கு உண்மையான விவேக அறிவு தோன்றுவதில்லை. அதற்கு காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால் மற்றவர்கள் மீது உள்ள விருப்பு வெறுப்புகளை மனதிலிருந்து நீக்காமல் மனதிற்குள் பதிந்து வைத்துக்கொண்டு இருப்பதால்தான், நமக்கு விவேக அறிவு வெளிப்படாமல் இருக்கிறது.

நமது மனதில் நம்மை அறியாமல் பதிந்து உள்ள விருப்பு வெறுப்புகளை நீக்கினால் விவேக சக்தி தோன்றும். நமது மனதில் அறிந்தும் அறியாமல் பதிந்து உள்ள விருப்பு வெறுப்புகளை அகற்றுவதற்கு வேண்டுமென்றால் சாஸ்திரங்களில் இதிகாசங்களில் வேதங்களில் கூறியுள்ளபடி வாழ்வதற்கு வேண்டும். தர்மத்தின்படி எல்லா உயிர்களும் தம்முயிர்போல் நினைத்து, ‘எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க’ என்ற மனநிலையில் உலகில் அன்புடன் வாழ வேண்டும். அவ்வாறு கடைப்பிடித்து வாழும்போது விவேக சக்தி தோன்றும்.

உலகில் தர்மத்தின்படி வாழ்ந்து அதன்படி செயல்பட்டால்தான், நம்மிடம் இருக்கும் பாவத்தின் பலன்களை முற்றிலும் நீக்குவதற்கு முடியும். இதற்கு சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி மனம், வாக்கு, காயம் மூன்றிலும் தர்ம சிந்தனையுடன் செயல்படுவதுதான் மனிதனுக்கு ஒரே வழி இந்த ஆன்மீக வழியாகும். மனிதர்கள் தர்மசிந்தனைகள் தர்ம செயல்பாடுகளுடன் வாழவேண்டுமானால் ஆன்மீக வழியில் சிந்தித்து அதன்படி செயல்புரிய வேண்டும்.

மனிதனுடைய பாவம் என்பது மங்கிய புத்தி, அறிவற்ற நிலை ஆகும். இந்த நிலை மனிதனுக்கு வருவதற்கு காரணம் தர்ம சாஸ்திரங்களில் கூறியவற்றைப் புறக்கணித்துவிட்டு தன்னிச்சையாக மனம்போனபடி பாவச்செயல்களை செய்வது ஆகும். அவ்வாறு மனம் போனபடி வாழ்வது பாவத்தின் மூலம் வரும் துன்பங்களை துயரங்களை அவன் அறிந்தும் அறியாமல் அனுபவிக்கிறான். தர்ம சாஸ்திரங்களில் இதிகாசங்களில் வேதங்களில் கூறியுள்ளபடி மனிதன் வாழ வேண்டும்.

அவ்வாறு வாழ்ந்து செயலில் ஈடுபட்டால்

விவேக அறிவினால் அவன் தன் பாவங்களை நீக்குவதோடு, மனிதன் உன்னத நிலையையும் அடையலாம். விவேக அறிவு பெறுவதற்கு ஆன்மிகம் மனிதர்களுக்கு பெரிதும் துணை புரிகிறது. எனவே மனிதர்கள் விவேக அறிவினை ஆன்மீக பயிற்சியின் மூலம் பெற வேண்டும். இந்த உலகில் நிலையற்றது, நிலையானது என்பதை பற்றி அறிந்து கர்மயோகத்தின்படி வாழ்ந்து உன்னதநிலைக்கு வருவதற்கு நாம் விவேக அறிவினை பயன்படுத்த வேண்டும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மகிழ்ச்சியில் விருப்பமில்லாமல் இருப்பது வைராக்கியம் என்பது ஆகும். சிலர் வைராக்கியம் என்றால் வெறுப்பு என்றும், சிலபேர் வைராக்கியம் என்றால் பிடிவாதம் என்றும் நினைக்கிறார்கள். இந்த இடத்தில் அதாவது ஆன்மீக வழியில் வைராக்கியம் என்றால் விருப்பமின்மை என்று பொருள் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஒருவர் முன்பாக தட்டில் பலவகையான இனிப்பு பலகாரங்கள் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

நாம் வாழும் இந்த உலகம் சத்தியம் அல்ல. பரம்பொருள் ஒன்றே சத்தியம் இந்த அறிவு மட்டும் ஒரு மனிதனுக்கு ஆரம்பத்தில் மனதில் நன்கு பதிந்து இருந்தால் மட்டும் போதுமானது. மற்றபடி நாம் பக்தி, பரம்பொருள் பற்றியெல்லாம் ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டாம். வைராக்கியத்திற்கு மூல காரணம் விவேக அறிவு ஆகும். விவேகம் என்பது வைராக்கியத்திற்கு விதை என்று கூறலாம். விவேகம் இருந்து வைராக்கியம் இல்லாமல் இருக்கலாம். விவேகத்தின் மூலம் வரக்கூடிய வைராக்கியம்தான் மனிதனின் மனதில் நிலைத்து நிற்கும். வேறு ஒரு காரணத்தினால் வரக்கூடிய வைராக்கியம் மனதில் நிலைக்காது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இதை அறிவதற்கு நமக்கு விவேக அறிவு என்பது தேவைப்படுகிறது. விவேகத்தின் பலன் அல்லது நன்மை என்ன என்று சிந்தித்துப் பார்த்தால் வைராக்கியத்திற்கு அது மூலகாரணமாக இருப்பது விவேக அறிவுதான் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

உலகில் உள்ள நல்ல பொருட்களை, நல்ல செயல்பாடுகளை நமது மனம் நாடவில்லை என்றால், நல்ல பொருட்கள், நல்ல செயல்பாடுகள் எவை என்று நமக்கு தெரியாத காரணத்தினால்தான் அல்லது நமது அறிவுக்கு எட்டாததுதான் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இந்த உலகில் அழியாத பொருட்கள் இருக்கிறது. அதாவது அழியாத பொருட்களால் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி ஆனந்தம் அழியாது நம்மிடம் இருக்கும் என்று தெரிந்தால் அந்தப் பொருள்களை அடைவதற்கு நமக்கு ஆர்வம் இருக்கும். அப்படிப்பட்ட அழிவில்லாத பொருள்கள் மீது அளவுகடந்த ஆசை கொள்வோம். உலகில் உள்ள பொருட்களால் வரக்கூடிய இன்பம்

அவற்றில் அவர் நெய் கலந்த இனிப்பு பலகாரத்தினை மட்டும் மிகவும் விரும்பி சாப்பிடுகிறார். மற்ற இனிப்பு வகை பலகாரங்களை அவர் சாப்பிடவில்லை என்றால், அதன் மீது அவருக்கு வெறுப்பு என்று அர்த்தம் என்று புரிந்து கொள்ளக்கூடாது. அவ்வாறு நினைக்கவும் கூடாது. விருப்பமில்லை என்றால் அப்போது அவருக்கு மற்ற இனிப்புவகையில் விருப்பமில்லை என்றுதான் அர்த்தம். சிலபேர் அதனை வெறுப்பு என்று தவறாக நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். விருப்பமின்மை என்றால் விருப்பமில்லை என்றுதான் அர்த்தம். அந்த நேரத்தில் அந்த இனிப்பு அவருக்கு சாப்பிட விருப்பமில்லை. வேறொரு சமயத்தில் மற்ற இனிப்புவகையின் மீது அவருக்கு விருப்பம் இருக்கலாம் என்று கருத்தில் கொள்ளவேண்டும்.

இந்த பிரபஞ்சமானது விதவிதமான பொருள்களின் மூலம் இன்பங்களை ஆனந்தத்தை மனிதர்களுக்கு கொடுத்துக் கொண்டே இருக்கிறது. அந்த இன்பத்தில் மனிதர்கள் அழுந்தி மூழ்கி விடமால் இருக்க வேண்டும். அதேபோல் உலகில் உள்ள பொருள்களினால் வரும் இன்பங்களில் மகிழ்ச்சியில் மீதும் அடிமைப்பட்டு அந்தப் பொருட்களை அடைவதற்கு மனதில் எண்ணி கவலைப்பட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. அவற்றின் மீது ஆசை வைத்து நம்மை நாமே அழித்துக் கொள்ளாமல் இருப்பதற்கு முயற்சியை மேற்கொண்டு வழிமுறைகளை ஆராய்ந்து அதன்படி செயல்படவேண்டும். அவ்வாறு செயல்படுவதற்கு ஆன்மீக வழியில் இதிகாசங்கள் வேதங்கள் உபநிடதங்கள் போன்றவை நமக்கு வழி காட்டுகிறது. ஒரு பொருள் மீது அளவுகடந்து ஆசை வைத்து அதன் மூலம் வரக்கூடிய இன்பத்தில்

மகிழ்ச்சியில் ஆனந்தத்தில் பற்று வைக்காமல் தாமரையிலைத் தண்ணீர்போல் பொருட்களின் மீது பற்று இருப்பதுதான் வைராக்கியம் ஆகும்.

நாம் எவ்வளவுதான் என்னதான் முயற்சி செய்தாலும் இந்த வைராக்கியம் மட்டும் வரமாட்டேன் என்கிறது என்று சிலபேர் நினைப்பார்கள். பொதுவாக ஒரு பொருள் மீது அளவுகடந்து ஆசை வைத்து அதன் மூலம் வரக்கூடிய இன்பத்தில் மகிழ்ச்சியில் ஆனந்தத்தில் பற்று வைக்காமல் இருக்கக்கூடிய வைராக்கியம் அனைவரிடமும் அவ்வளவு சுலபமாக வருவதில்லை. நமக்கு அத்தகையதொரு வைராக்கியம் படிப்படியாகத்தான் வரும். அதுவரையில் நாம் பொறுமையுடன் ஆன்மீக வழியில் முயற்சியினை விடாமல் தவறாமல் மேற்கொள்ள வேண்டும். நமது மனதில் வைராக்கியம் வருவதற்கு மனம் ஒரு பக்குவநிலைக்கு வர வேண்டும்.

நமது மனம் பக்குவநிலை வருவதற்கு பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை, மன்னிக்கும் தன்மை போன்ற குணங்கள் இருக்க வேண்டும். உடனே அனைவருக்கும் இத்தகைய வைராக்கியம் வந்து விடுவதில்லை. உலகில் போகம் தரக்கூடிய பொருட்களினால் வரும் இன்பங்களில் பற்றில்லாமல் இருப்பது, அது உணவாக இருக்கலாம். பொன்பொருளாக காட்சிப்பொருட்களாக அல்லது வேறு எந்தவகைப் பொருட்களாகக்கூட இருக்கலாம். அவற்றின்மீது ஆழ்ந்த பற்றில்லாமல் இருப்பதுதான் பூரண வைராக்கியம் ஆகும். இத்தகைய வைராக்கியம் நமக்கு வந்துவிட்டால் நாம் தேடும் விரும்பும் மன அமைதி தானாக வந்தடையும்.

உலகில் இருக்கும் எந்தப் பொருளின்மீதும் மனம் ஆசை கொள்ளக்கூடாது. ஆசையை விட்டொழிக்க வேண்டும். நமது எண்ணத்தில் நம்மை அறியாமல் உருவாகும் சில ஆசைகள் பூர்த்தியாகாமல் இருந்தால் நம்மை எந்தவிதத்திலும் பாதிப்பது இல்லை என்பதை உணர வேண்டும். அந்த ஆசைகள் நிறைவேற வேண்டும் பூர்த்தியாக வேண்டும் என்று விடாப்பிடியாக அந்தப் பொருளின்மீது மிகுந்த பற்று வைத்திருப்போம். அப்படிப்பட்ட ஆசைகள் மனதில் இருக்கலாம் மனதில்கூட தோன்றலாம். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால் அந்த ஆசையானது நிறைவேற வேண்டும் என்று பிடிவாதமில்லாமல் இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பதற்கு ஆன்மீக வழியில் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். உலகில் காணப்படும் எத்தகைய ஆசையும் நம் மனதை முழுவதும் ஆக்கிரமிப்பு செய்யும்படி விட்டுவிடக்கூடாது. அந்த ஆசைக்கு நாம் ஒருபோதும் அடிமையாகவும் கூடாது.

எடுத்துக்காட்டாக ஒருவர் விலை உயர்ந்த கார் வாங்க வேண்டும் என்று நினைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அது அவர் தகுதிக்கு மீறிய ஆசை என்று தெரிந்திருந்தும் அதில் விடாப்பிடியாக அதன்மீது ஆசை வைக்கக்கூடாது. அந்தக் கார் வாங்காமல் இருந்தால் அவருக்கு எந்தவிதமான பாதிப்பும் அவர் வாழ்வில் குடும்பத்தில் ஏற்படப்போவதில்லை. அவர் கார் வாங்க வேண்டும் என்று அவர் ஆசைப்படலாம். அந்த எண்ணம்கூட அவர் உள்ளத்தில் தோன்றலாம். அதில் தவறு ஏதும் இல்லை. அந்த எண்ணம் பூர்த்தியாக வேண்டும் என்று விடாப்பிடியாக இருக்கக்கூடாது. ஆன்மீக வழியில் முன்னேற்றம் காண நினைப்பவருக்கு அவர் மன அமைதிக்கும் அந்த விடாப்படியான ஆசை ஒரு தடைக்கல்லாக இருக்கும் என்பதை அறிய வேண்டும். இத்தகைய விடாப்பிடியான ஆசை மனதை தவறான வழிக்கு அழைத்துச் சென்று விடும்.

வைராக்கியம் அடைய வழிமுறைகள் என்ன என்பது பற்றி ஆராய்ந்து சிந்தித்து முயற்சிகள் மேற்கொள்ளும்போது, வைராக்கியம் என்பது நமது மனதில் உறுதியாக ஏற்படும். வைராக்கியம் ஏற்படுவதற்கு பல வழிகள் உள்ளன. பொதுவாக நமது மனதில் ஒரு பொருளின்மீது அவ்வப்போது தோன்றும் தேவையற்ற ஆசைகளை வளர விடாமல் பொறுமையாக முளையிலே கிள்ளி எறிந்துவிட வேண்டும். மனிதன் மானம் காக்க ஆடைகள் அணிவதற்கு ஆசைப்படலாம். அப்படி அணியும் ஆடைகள் விதவிதமான ஆடம்பரமான ஆடைகளாக அணிய ஆசைப்பட்டால் அது பேராசை ஆகும். உடனே நமக்கு தாகத்திற்குத் தண்ணீர் அருந்த ஆசை. மூச்சு விட வேண்டும் என்ற ஆசை. உலகில் நலமுடன் வாழ வேண்டும் போன்ற ஆசைகள் இருக்கலாமா என்று கேட்கத் தோன்றும்.

உலகில் உள்ள பொருட்களின்மீது அந்தப் பொருட்களினால் வரக்கூடிய மகிழ்ச்சியில் ஆசை இருக்கலாம். அது பேராசையாக மட்டும் இருக்கக்கூடாது. சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள தர்ம நியாயப்படி ஆசைகள் இருக்க வேண்டும். நாம் உணவின் மீது ஆசை வைக்கலாம். நாள்தோறும் அறுசுவையோடு

உணவு உண்ண வேண்டும் என்று நம் மனதில் எண்ணக்கூடாது. அது பேராசை என்று புரிந்து கொள்ள வேண்டும். நாம் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். இதுபோன்று உலகில் காணும் பொருட்களின்மீது அளவோடு மனதில் ஆசைகளை வைத்துக் கொள்வது ஒன்றும் தவறில்லை என்று ஆன்மிகம் கூறுகிறது.

ஒரு பொருளின்மீது ஆசைபடும்போது தர்மநியதிக்குட்பட்ட ஆசையாக இருக்க வேண்டும் என்று மனதில் எண்ணிக்கொள்ள வேண்டும். மனதில் பேராசை என்பது கூடாது ஒரு மாணவன் எழுதுவதற்கு ஒரு பேனா வைத்துக் கொள்ளலாம். அவன் விதவிதமான பேனாக்கள் வைத்துக் கொள்ளவேண்டும் என்று எண்ணுவது பேராசை ஆகும். அதற்கு ஆன்மீகவழியில் பேராசைக் கொள்ளக்கூடாது என்ற சிந்தனை தோன்றி, மனஉறுதிப்பாடு உதவி செய்கிறது. ஒரு பொருளின்மீது அளவுக்கு மீறி ஆசை கொள்ளக்கூடாது. ஒரு பொருளை அடைவதற்கு விரும்புவதும் அப்பொருளினால் இன்பம் தொடர்ந்து கிடைக்கவேண்டும் என்று விடாப்பிடியாக ஆசையில் பிடிவாதம் கூடாது. அப்படிப்பட்ட ஆசையை விடுவதற்கு வைராக்கியம் உதவி செய்கிறது. அவ்வாறு மனதில் வைராக்கியம் வரும்போது நாம் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கிறது.

ஒருவருக்கு தினமும் செய்தித்தாள் படிக்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் பதிந்து நாள்தோறும் செய்தித்தாள் படித்து வருகிறார். ஒருநாள் எதிர்பாராதவிதமாக செய்தித்தாள் வரவில்லையானால் அவர் அன்று முழுவதும் தன்னோட வாழ்வில் எதையோ இழந்து விட்டதுபோல் உணர்வார். அவருக்கு செய்தித்தாள் படிப்பத்தில் அவருக்கு ஆசை விருப்பம் மட்டும் இல்லாமல், அந்த செய்தித்தாள் படிப்பதில் அவரையும் அறியாமல் அதற்கு அடிமையாகி விட்டார் என்றுதான் கூற வேண்டும்.

அன்று செய்தித்தாள் படிக்காமல் இருந்ததால் அவர் வாழ்வில் எதனை இழந்து விட்டார். அவர் ஒன்றுமே இழக்கவில்லை. இதேபோன்றுதான் உலகில் உள்ள பொருட்களின்மீது ஆசை கொள்வது. இப்படிப்பட்ட ஆசையைத்தான் விடவேண்டும். பிடிவாதம் என்பது ஒருவகையான பேராசை என்பதை உணர வேண்டும். உணர்ந்து அத்தகைய பிடிவாதத்தினை நம் மனதிலிருந்து அகற்றுவதற்கு ஆன்மீக வழியில் மனதில் வைராக்கியம் கொள்ள வேண்டும்.

நாம் நமது மனதில் நம்மையும் அறியாமல் வரக்கூடிய ஆசையை பேராசையை எப்படி விட முடியும் என்று சிலருக்கு கேட்கத் தோன்றும். ஒவ்வொரு ஆசையும் சங்கல்பத்திலிருந்து தோன்றியுள்ளது. எனவே ஆசையை விடவேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி சங்கல்பத்தை விட வேண்டும்.

பெரும்பாலும் ஒருவருக்கு ஒரு பொருளைப் பார்த்தவுடன் ஆசை அதன் மீது வருவதில்லை. அப்பொருளைப்பற்றி பார்த்து நினைவில் வைத்துக்கொண்டு அதனால் வரக்கூடிய இன்பத்தை மனதில் இடைவிடாது சிந்தித்துக்கொண்டே இருக்கிறது. அவ்வாறு சிந்தித்துக்கொண்டே இருக்கும்போது அதன்மீது ஆசை என்ற எண்ணம் மனதில் பேராசையாக உருவாகி விடுகிறது என்பதை உணரவேண்டும்.

சங்கல்பத்தை விடவேண்டும் என்றால் அந்தப்பொருளின் மீது உள்ள ஆசையை முதலில் விடுதல் வேண்டும்.

அதாவது அப்பொருளினால் வரும் இன்பத்தை பற்றி மீண்டும் மீண்டும் மனதில் நினைக்கக்கூடாது. அதற்கு வைராக்கியம் துணை புரிகிறது. உலகில் அழகான பொருளைப் பார்த்தவுடன் அப்பொருளானது நம் கண் முன்பாக இல்லை என்றாலும் அப்பொருள் நம் மனதில் இருந்துகொண்டு நம் மனதை விட்டு அகலாமல் ஆக்கிரமத்துக்கொண்டு இருக்கிறது.

அவ்வாறு இருப்பதால்தான் அப்பொருளின் மீது பேராசை வருகிறது. இதிலிருந்து ஒரு பொருளை மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டே இருப்பதால்தான் அதன் மீது பேராசை வருகிறது. அதன்மூலம் நாம் நம்மையறியாமல் பல தவறுகள் செய்யத் தூண்டுகோலாக அமைந்து விடுகிறது என்பதை மனம் உணர வேண்டும். அதனை மனம் எவ்வாறு உணர்ந்து கொள்ள முடியும் என்பதை பார்க்கலாம்.

(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJ. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJ, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com


மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க
Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து
Google Play
Search
Categories
Home
Top charts
New releases
Apps
My apps
Shop
Games
Family
Editors' Choice
Account
Payment methods
My subscriptions
Redeem
Buy gift card
My wishlist
My Play activity
Parent guide
Aanmeega Malar - ஆன்மீக மலர் - All in One App
mobigoods
News & Magazines
Contains ads
This app is compatible with some of your devices.
Installed
ஆன்மிகமலர்
aanmeegamalar
Subscribe
MONEY
நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை
இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...

Google Play